# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

டிசம்பர் 2008 ஜீவியம் 14 மலர் 8

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அன்பர் கடிதம் | 2 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 3 |
| லைப் டிவைன் | 4 |
| இம்மாதச் செய்தி | 14 |
| அதிர்ஷ்ட மழை | 15 |
| சாவித்ரி | 18 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 20 |
| அஜெண்டா | 27 |
| தொலைந்த பொருள் | 30 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 35 |
| சாசனம் | 38 |
| வாழ்க்கையை மேம்படுத்த Life Divine கருத்துகள் பயன்படுமிடங்கள் | 48 |
| கர்மவினையைக் கரைப்பதற்கான பிரார்த்தனை | 61 |
| லைப் டிவைன் - கருத்து | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

இருப்பதைப் பெற முயல்வது சுபிட்சத்தைப் பலப்படுத்தும். இல்லாததைக் கேட்பது உதவாது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதை விட வாய்ப்புகளை ஏற்க அதிக ஆர்வம் தேவை.

மனிதனுடைய தேவைகள் மிகச்சிறியவை. அவனைச் சூழ்ந்துள்ள சந்தர்ப்பங்கள் அளவுகடந்தவை, அனந்தமானவை. ஆனால் அவன் இருப்பதை கடுகளவே பயன்படுத்துகிறான்.

வேண்டியது ஒரு கம்மல்.
இருப்பது கனகமலை.

## அன்பர் கடிதம்

அன்னை அவர்களின் சமூகத்திற்கு அநேக கோடி நமஸ்காரங்கள். என் பெயர் அருணா. நான் அன்னையை அறிந்து ஏழு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து நான் செய்த செயல்கள் அனைத்திலும் எனக்கு வெற்றியே. இங்கு நான் ஒரு முக்கிய சம்பவத்தை மட்டும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் 2000 ஆகஸ்டு முதல் மேல்மருவத்தூரில் பணிபுரிந்து வந்தேன். நான் பணிபுரியும் இடம் என் வீட்டிலிருந்து ஏறத்தாழ 80 கி.மீ.க்கு மேல் இருந்தது. தினமும் காலை 6.30க்குக் கிளம்பி, இரவு 8.30க்குத்தான் வீட்டுக்கு வருவேன். நான் ஏழு ஆண்டுகள் இப்படிச் சென்று வந்தேன். கவுன்சிலிங் அறிவித்து மாறுதல் வழங்கினார்கள். நானும் கலந்தாய்வில் மாறுதல்பெற பல முறை சென்றேன். அன்னையிடம் நான் வேண்டியது, பணம் செலவு செய்யாமல் சென்னைக்கு அருகில் மாறுதல் வேண்டும் என்பதுதான். அதன்பின் இரண்டு முறை என் வேண்டுதலை மீறிப் பணமும் கொடுத்து முயன்றும் என்னால் மாறுதல்பெற இயலவில்லை. இந்த ஆண்டும் மே மாதக் கலந்தாய்வில் எனக்கு மாறுதல் கிடைக்கவில்லை. பணிபுரியும் இடத்தில் பல்வேறு பிரச்சினைகளால் எனக்கு அவசியம் மாறுதல் வேண்டும்என்று அன்னையை மனமாற வேண்டினேன். திடீரென நடுவில் கலந்தாய்வு தீர்மானித்தனர். சென்ற மாதம் 1ஆம் தேதி பாண்டிச்சேரி சென்று அன்னையிடம் மனமுருகி வேண்டி, எனக்கு அன்னையைத் தவிர யாரும் இல்லைஎன்று வேண்டி வந்தேன். ஜூலை 3ஆம் தேதி கலந்தாய்வில் பல்வேறு தடைகளை நீக்கி அன்னை எனக்கு, சென்னைக்கு அருகில் மாறுதல் பெற்றுத் தந்தார், ஒரு பைசா செலவும் இன்றி. என்னால் இன்னும் நம்பவே இயலவில்லை. அன்னையை நம்பியவர் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. இதை எல்லோரிடமும் தெரிவித்துக்கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி. - ***அருணா, சென்னை.***

❀ ❀ ❀



## தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**61.** *ஒருவர் பொறை இருவர் நட்பு.*

(பொறை - சகிப்புத் தன்மை)

✡ **ஒருவர் சமர்ப்பணம் பலர் தவற்றைத் திருத்தும்.**

**62.** *இருதலைக் கொள்ளி எறும்பு போலவென்பார்.*

✡ **எங்கு போனாலும் அங்கு அன்னை முன்பு போய் காத்திருப்பார்.**

**63.** *உள்ளம் படர்ந்ததே கூறும் முகம்.*

*(அகத்தின் அழகு முகத்தில் தெரியும் - வழக்கிலுள்ள பழமொழி).*

✡ **அகத்தின் அன்னை முகத்தில் ராஜகம்பீரம். பிரார்த்தனையின் பலன் சமர்ப்பணத்தில் தெரியும்.**

**64.** *மகனறிவு தந்தை அறிவு.*

✡ **அன்னையை ஏற்ற மகன் தந்தையறியாததையும் அறிவான்.**

**65.** *தமக்கு மருத்துவர் தாம்.*

✡ **எல்லா வியாதிகட்கும் மருத்துவம் "அன்னை நினைவு".**

தொடரும்....

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அழிச்சாட்டம் உடலின் சக்தியை நிதானப்படுத்துகிறது.

# லைப் டிவைன்

கர்மயோகி

## XVIII. Mind and Supermind

We have been striving for a conception. Page No.159
It is of the essence of the supramental life. Para No.1
The divine soul possesses that life.
It does so in Sachchidananda.
It is secure in its possession.
Ours is a body of Sachchidananda.
It is formed here.
It is in the mould of a mental and physical living.
We envisage this supramental existence.
It has no connection with our life.
Nor does it have any correspondence with our life.
Our life is active between two terms.
They are the two firmaments of our normal existence.
They are the mind and body.
This is the life we know.
It is rather a state of being.
It is a state of consciousness.
It is a state of active relationship.



## 18. மனமும் சத்தியஜீவியமும்

நாம் ஒரு கருத்தை நாடுகிறோம்.
சத்தியஜீவிய வாழ்வின் சாரம் அது.
தெய்வீக ஆன்மா அவ்வாழ்வைப் பெற்றுள்ளது.
அது சச்சிதானந்தத்திலுறைகிறது.
அங்கு அது பத்திரமாக இருக்கிறது.
நம்முடல் சச்சிதானந்தத்துடையது.
அங்கே அது உருவாகிறது.
மனம் உடலான வாழ்வு அது.
சத்தியஜீவிய வாழ்க்கையை நாமறிவோம்.
அது நம் வாழ்வுடன் தொடர்பு கொண்டதன்று.
நம் வாழ்வுடன் அது எந்தத் தொடர்பும் உடையதன்று.
நம் வாழ்வு இரு அம்சங்களிடையே நடமாடுகிறது.
நம் அன்றாட வாழ்வின் இரு லோகங்கள் அவை.
அவை மனம், உடல்.
இதுவே நாமறிந்த வாழ்வு.
இதை ஜீவனின் நிலை எனலாம்.
இதை ஜீவிய நிலை எனலாம்.
இதைச் செயல்படும் உறவெனலாம்.

It is one of mutual enjoyment.
The disembodied souls possess such life.
Their experience is in a world without physical forms.
There differentiation of souls has been accomplished.
The differentiation of bodies is not accomplished.
It is a world of active and joyous infinities.
It is not one of form-imprisoned spirits.
A reasonable doubt arises.
Whether a divine life is possible with this body.
The mind is form-imprisoned.
It is of form-trammelled force.
This is what we know as existence.

There is a supreme infinite being. Page No.159
It is conscious-force and self delight. Para No.2
Our world is a creation of that being.
Our mentality is its perverse figure.
We try to conceive of that being.
Divine Maya, Truth-Consciousness, Real-Idea are there.
There is the transcendent and universal Existence.
It has a conscious force.
It conceives, forms and creates the universe.
It governs, orders the cosmos.
The cosmos is its manifested delight of being.
We are trying for an idea of it.
There are four great divine terms above.
There are three others of our human experience.
Mind, life and body are they.
We have not studied their relationship.
There is the undivine Maya.



ஒருவர் மற்றவரை அனுபவிக்கும் உறவுஎனவும் கூறலாம்.
உடல் பெறாத ஆத்மாக்கள் பெறும் வாழ்வு அது.
உடலின் உருவமற்ற உலகின் அனுபவம் அது.
அங்கு ஆத்மாக்கள் பிரிந்தன.
உடல்கள் அங்கு பிரியவில்லை.
சுறுசுறுப்பான அனந்த சந்தோஷ லோகமது.
ரூபச்சிறைப்பட்ட ஆத்மாக்களில்லை.
ஓர் ஐயம் எழுகிறது.
இவ்வுடலுக்கு தெய்வீக வாழ்வுண்டா என்பது அது.
மனம், ரூபம்என்ற சிறைப்பட்டது.
அது ரூபத்தால் சூழப்பட்ட சக்தி.
வாழ்வுஎன நாம் அறிவது இதுவே.

உயர்ந்த அனந்த ஜீவன் உண்டு.
அது சித்-சக்தி, சுய-ஆனந்தம்.
அந்த ஜீவன் நம் உலகைப் படைத்தான்.
நம் மனம் அந்த ஜீவனின் குதர்க்கமான உருவம்.
நாம் அந்த ஜீவனை நம் சிந்தனையால் உருவகப்படுத்துகிறோம்.
தெய்வீக மாயை, சத்தியம்-ஜீவியம், முழு எண்ணம் உண்டு.
பிரபஞ்ச வாழ்வும், அதைக் கடந்த வாழ்வும் உண்டு.
அதற்கு சித் சக்தியுண்டு.
அது ரூபங்களை உற்பத்தி செய்து, பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கிறது.
பிரபஞ்சத்தை அது நிர்வாகம் செய்கிறது.
பிரபஞ்சம் அதன் ஆனந்தமயமான ஜீவனின் சிருஷ்டி.
அதைச் சிந்திக்க முயல்கிறோம்.
நான்கு பெரிய தெய்வீக அம்சங்கள் மேலேயுள்ளன.
மனித அனுபவத்திற்குரிய மூன்று பிற அம்சங்கள் உள்ளன.
மனம், உயிர், உடலுண்டு.
இரண்டிற்குமுள்ள தொடர்பை நாம் ஆராயவில்லை.
அஞ்ஞான மாயையுண்டு.

It is the root of all our striving and suffering.
It develops out of the divine reality of the divine Maya.
We have not scrutinised it.
We have to do this.
We have to weave these missing cords of connection.
Till then our world is unexplained to us.
The unification of the higher and the lower will then reveal to us.
Our world has come forth from Sachchidananda.
It subsists in His being.
He dwells in it as Enjoyer, Knower and Lord and Self.

We have seen the dual terms of sensation, mind, being, force are His representations.
They represent His delight, His conscious force, His divine existence.
They are actually opposite of what He is.
We dwell in the cause of these opposites.
We are contained in the lower triple form of existence.
So, we cannot attain to the divine living.
Either we must exalt or exchange.
Exchange the body for the pure (living) existence.
Exchange life for pure conscious-force.
Exchange sensation and mentality for the pure delight.

That delight is also knowledge.
They live in the truth of the spiritual reality.
Ours is earthly mental existence.
Must we abandon this for its opposite.
Above there is a pure state of Spirit.
There it is a world of the Truth of things.



நம் வேதனைக்கும், முயற்சிக்கும் உற்பத்தி ஸ்தானம் அது.
தெய்வீக மாயையின் தெய்வீகசத்தியத்தில் அது உருவாகிறது.
நாம் அதை ஆராயவில்லை.
நாம் அதைச் செய்யவேண்டும்.
கண்ணில் படாத இழைகளை நாம் நூற்கவேண்டும்.
அதுவரை உலகம் நமக்குப் பிடிபடாது.
உலகம் பிடிபட்டால் மேலும் கீழும் இணையும்.
உலகம் சச்சிதானந்தத்திலிருந்து வந்தது.
அது அவனுடைய ஜீவனில் உள்ளது.
பிரம்மமாகவும், ஈஸ்வரனாகவும், புருஷனாகவும், ஆத்மாவாகவும் அவன் உள்ளான்.
உணர்ச்சியின் இரு அம்சங்களைக் கண்டோம். மனம், ஜீவன், சக்தி ஆகியவை அவனுடைய பிரதிநிதிகள்.
அவை அவனுடைய ஆனந்தம், சித்-சக்தி, தெய்வீக வாழ்வைப் பிரதிபலிக்கின்றன.
அவை உண்மையில் அவனுக்கு எதிரானவை.
எதிரானவற்றின் காரணத்தில் நாம் வசிக்கிறோம்.
அஞ்ஞானத்தின் மூன்று அம்சங்களில் நாம் உள்ளோம்.
நம்மால் தெய்வீக வாழ்வையடைய முடியாது.
நாம் உயர வேண்டும் அல்லது அதனுடன் மாற்றிக்கொள்ள வேண்டும்.
உடலைக் கொடுத்து தூய வாழ்வைப் பெறவேண்டும்.
வாழ்வைக் கொடுத்து தூய சித்-சக்தியைப் பெறவேண்டும்.
உணர்வையும், மனப்பான்மையையும் தூய ஆனந்தத்துடன் பரிமாறிக் கொள்ளவேண்டும்.
ஆனந்தம் ஞானம்.
அவை ஆன்மீக சத்தியத்தின் உண்மையில் வாழ்கின்றன.
நமது வாழ்வு புவியில் மனம் வாழும் வாழ்வு.
இதற்கு எதிரானதுடன் இதை மாற்றிக்கொள்ளலாமா?
மேலே ஆன்மாவின் தூய நிலைமையுண்டு.
அது விஷயத்தின் சத்தியலோகம்.

It may exist or other worlds may be there.
If so, it will be divine Bliss, divine Energy and divine Being.

If so, the perfection of humanity is elsewhere.
It is not in humanity itself.
There is a summit of earthly evolution.
It may be a fine apex of dissolving mentality.
From there it takes a great leap into formless being.
They are worlds beyond the reach of embodied Mind.

Creation of the universe is creation of forms. Page No.160
The four divine principles do it. Para No.3
Such action is necessary for creation of forms.
We call it undivine.
This is the reality.
The divine creates these forms in his existence.
These forms are inside the divine.
They are not outside the divine existence.
They are within the conscious-force and bliss.
They are part of the working of the divine Real-Idea.
The higher divine consciousness can play in a world of forms.
There is no reason to deny it.
Mind, etc., represent higher consciousness.
We feel they distort the higher.
We assume it is necessary.
As they are the immediate support, we feel, there must be a distortion.
Mental consciousness must distort, we assume, the higher consciousness they represent.
We think of the energy of the vital force likewise.



அது உண்டு அல்லது வேறு உலகம் இருக்கலாம்.
அப்படியானால் அது தெய்வீகஆனந்தம், தெய்வீகசக்தி, தெய்வீக ஜீவனாகும்.
அது உண்மையானால் மனிதன் சிறப்படைவது இங்கில்லை.
அது புவியிலில்லை.
புவியின் பரிணாமத்திற்குச் சிகரம் உண்டு.
மனம் கரையும் மலையுச்சியது.
அங்கிருந்து ரூபமற்ற ஜீவனுள் தாவிக் குதிக்க வேண்டும்.
மனம் பெற்ற வாழ்வு எட்ட முடியாத லோகங்கள் அவை.

ரூபத்தை சிருஷ்டிப்பது சிருஷ்டி.
இந்த நான்கு தெய்வீகத்தத்துவங்களும் அதைச் செய்கின்றன.
ரூபத்தைச் சிருஷ்டிக்க அப்படிச் செய்வது அவசியம்.
அதை நாம் லௌகீகம் என்கிறோம்.
அதுவே சத்தியம்.
இறைவன் இந்த ரூபங்களைத் தன்னுள் சிருஷ்டிக்கிறான்.
அவை அவனுள் உள்ளன.
அவை இறைவனுக்கு வெளியிலில்லை.
சித்-சக்தியிலும், ஆனந்தத்திலும் அவை உள்ளன.
இறைவனின் முழு எண்ணம் செயல்படுவதின் பகுதிகள் அவை.
உயர்ந்த தெய்வீகஜீவியம் ரூபலோகத்தில் செயல்படும்.
அதை மறுக்க முடியாது.
மனம், உயிர், உடல் உயர்ந்த ஜீவியத்தின் பிரதிநிதிகள்.
அவை உயர்வைச் சிதறச் செய்கின்றன.
அது அவசியம்என நினைக்கிறோம்.
அருகில் ஆதரவாக இருப்பதால் சிதறுவது இயற்கைஎன நினைக்கிறோம்.

மனம் உயர்ந்த ஜீவியத்தைப் பிரதிபலிக்கும்பொழுது சிதறுவது இயற்கை என்பது நம் கருத்து.
உடலின் சக்தியையும் நாம் அப்படி நினைக்கிறோம்.

Even the formal substance is like that to us.
All these are not necessary.
The divine Truth has the Mind in its pure form.
Body and life too have their pure forms similarly.
It is possible, even probable.
This arrangement is part of a whole arrangement.
The supreme Force works through that.
Mind, etc., are capable of divinity.
Science reveals to us one terrestrial cycle of a single birth.
Mind, etc., have a form and works in this period.

It is a short period.
Mind, etc., have a large potential.
They work in the living body.
These potentials are not exhausted in one birth.
Mind, etc., work as they do because they are separated from their original Truth.
They are separated from the consciousness of the Truth.
Their work proceeds from the Truth.
This separation can be removed.
It can be done by the expanding energy of the Divine in humanity.
Then, their present functionings will be converted.
It would be converted by a supreme evolution.
It is a progression into a pure working.
That is there in the Truth Consciousness.

*Contd….*

❀❀❀



ஜடப் பொருளும் அது போன்றதே.
இவையனைத்தும் அவசியமில்லை.
தெய்வீகசத்தியம் மனத்தைத் தூய்மையாகப் பெற்றுள்ளது.
அதுபோன்ற தூய்மையான ரூபங்கள் உடலுக்கும், உயிருக்கும் உண்டு.
அது முடியும்.
முழுமையின் பகுதியிது.
பெரிய சக்தி இதன் வழி வேலை செய்யும்.
மனம், உயிர், உடலுக்குத் தெய்வீகம் உண்டு.
விஞ்ஞானம் பிறப்புக்கும், இறப்புக்கும் இடையேயுள்ளதைக் கூறுகிறது.
மனம், உயிர், உடல் ஆகியவற்றிற்கு ரூபம் உண்டு. அவை இப்பொழுது செயல்படுகின்றன.
அது சிறிய காலம்.
மனம், உயிர், உடலுக்கு ஏராளமான சக்தியுண்டு.
அவை உயிருள்ள உடலில் செயல்படுகின்றன.
இவை ஒரு பிறவியில் தீருபவையில்லை.
மனம், உயிர், உடல் இதுபோல் செயல்படுவதற்கு அவற்றின் ஆதியிலிருந்து பிரிந்து நிற்பதே காரணம்.
அவை சத்தியத்தின் ஜீவியத்திலிருந்து பிரிந்துள்ளன.
அவற்றின் தொழிற்பாடு சத்தியத்திலிருந்து எழுகிறது.
அப்பிரிவினையை விலக்கலாம்.
மனித குலத்துள் விரிவடையும் தெய்வீகசக்தியால் அதைச் செய்யலாம்.

அப்படியானால் அவற்றின் தற்போதைய செயல் மாறும்.
ஓர் உயர்ந்த பரிணாமத்தால் அவை மாறும்.
தூய செயலை அவ்வேலையடையும்.
அது சத்தியஜீவியத்துள்ளிருக்கிறது.

**தொடரும்.....**

❀❀❀

## இம்மாதச் செய்தி

**செல்வத்தைக்**

**கவர முடியாத ஆன்மீகம்**

**பகவான் கூறும் முழுமையான**

**ஆன்மீகமாகாது.**



# அதிர்ஷ்ட மழை

**N. அசோகன்**

அதிர்ஷ்டத்தை அனுபவிப்பவர்கள் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாய், பல நல்ல விஷயங்களை அவர்கள் வாழ்க்கையில் நடப்பதை அறிவார்கள். நடப்பதைச் சில சமயம் அவர்களாலேயே நம்ப முடியாது. அந்த அளவுக்கு அதிர்ஷ்டம் அமோகமாக வரும். சில பேருக்கு அசம்பாவிதங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அதிகமாக வருவதுண்டு. அப்படி துரதிர்ஷ்டத்துக்கு ஆளானவர்கள் சனி தம்மை விரட்டுவதாகக்கூடச் சொல்வார்கள். அதிர்ஷ்டமானாலும் துரதிர்ஷ்ட-மானாலும் வரும்போது பலமாக வருமென்பது உலகின் பல்வேறு பாகங்களிலும் மக்கள் பொதுவாக அறிந்த ஓர் உண்மையாகும்.

ஸ்ரீ அரவிந்தருடைய லைஃப் டிவைன் (Life Divine) புத்தகத்தில் இப்படிப் பல அரிய வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள் இருக்கின்றன. இப்புத்தகம் பரவலாகப் படிக்கப்படாமல் இருப்பது நம்முடைய துரதிர்ஷ்டமாகும். மகாபாரதமும் மற்றும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் இம்மாதிரியான அரிய உண்மைகளால் நிரம்பியுள்ளன. ஷேக்ஸ்பியருடைய காலத்தில் வாழ்க்கை, துன்பம் நிறைந்ததாக இருந்ததால், அவருடைய நாடகங்கள் நெகட்டிவாகவும், சோகமயமாகவும் இருந்தன. 1956ஆம் ஆண்டில் சத்தியஜீவியம் பூவுலகில் இறங்கியபின்னர், வாழ்க்கையில் பாஸிட்டிவ் சூழல் ஏற்பட்டது. எல்லோரும் உடனே இச்சூழலைப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு இது மேலோட்டமாக இப்போது இல்லை. இருந்தாலும், ஆன்மீக சக்தியைப் பயன்படுத்தி நாம், சூட்சுமமாக இருக்கும் இச்சூழலைத் திடமான பலனாக மாற்றிக்கொள்ளலாம்.

சிரிப்பு நாடகங்கள், திரைப்படங்கள், கதைகள் போன்றவற்றின் இறுதியில் எல்லோரையும் மகிழ்விக்கும் வகையில் முடிவு இருக்கும். இப்படி ஒரே நேரத்தில் நிறைய அதிர்ஷ்டம் வருவதற்கு ஸ்ரீ அரவிந்தர் விளக்கம் தருகிறார். இயற்கை ஒரே நேரத்தில் பல விஷயங்களை நகர்த்துகிறது என்கிறார் அவர். நமக்கு அது பயனற்றதாகத்

தெரியலாம். ஆனால், இதைப் பற்றி எல்லாம் இயற்கை பொருள்படுத்துவதில்லை. காரியங்களெல்லாம் கூடி வரும்பொழுது, ஒரே நேரத்தில் அமோகமாகப் பலன் தெரியும்போது, நமக்குப் பிரமிப்பாக உள்ளது. ஆன்மசக்தியைப் பயன்படுத்துகிறவர்கள் இப்படி ஓர் அமோகத்தை அனுபவிக்கிறார்கள். அன்னை பக்தையான பெண்மணி ஒருவர் ஒரே ஆண்டில் தம்முடைய வருமானத்தை ஐந்து மடங்காக்கி, தம்மிரு பெண்களுக்கும் திருமணம் செய்துவைத்து, அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பினார்.

சாதாரண மனிதன் ஏதாவதோர் அலுவலகத்தில் பணி-யாற்றிவிட்டு ஓய்வு பெறுகிறான். அச்சமயம், அவருக்கு ஓய்வுகாலப் பலன்கள் கிடைக்கின்றன. அவருடைய முப்பது வருடப் பணிக் காலத்தில் ஏதாவதொரு சாதனையை அவர் நிகழ்த்தியிருப்பார். இப்படியில்லாமல் ஒருவர் ஒரே நேரத்தில் பல்வேறு ஈடுபாடுகளை வளர்த்துக்கொள்வதாக நாம் கற்பனை செய்யலாம்.

அரசியல்ஈடுபாடு, விவசாயம், வணிகம் இம்மூன்றும் அவர் வாழ்க்கையில் இருப்பதாகவும், தம் சக்திக்கு மீறிய அளவில் பெண்களுக்குத் திருமணச் சம்பந்தம் ஏற்பட முயல்வதாகவும், பிள்ளைகளை உயர்ந்த நிலையில் படிக்க வைப்பதாகவும் நாம் வைத்துக்கொள்வோம்.

இப்படிப்பட்டவரை எவரும் பேராசைக்காரர் என்பார்கள். ஆனால் வேறொரு கோணத்தில் பார்த்தால், இவர் மிகவும் சுறுசுறுப்பானவரென்றும் சொல்லலாம்.

இப்படி எல்லா விஷயங்களிலும் மேலோட்டமான ஈடுபாடுமட்டும் இருந்தால் பலன் சுமாராகத்தான் இருக்கும். ஆனால், செய்வதை நேர்த்தியாகச் செய்பவராக இருந்தால், அவர் ஈடுபடும் எல்லாக் காரியங்களிலும் அவருடைய முழுக் கவனமும் இருக்கும். நெடுநாள் பலன் தெரியாமல் இருக்கலாம். ஆனால், பலிக்கும்போது, தேர்தல் வெற்றி, வியாபாரத்தில் பெரிய முன்னேற்றம், மகளுக்குப் பெரிய இடத்தில் சம்பந்தம், மகனுக்கு உயர்ந்த இடத்தில் வேலைஎன்று எல்லாம் ஒன்றாகத் திரண்டு வரும்.



நேர்த்தியான வேலைக்கு இப்படி அமோக அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் திறனுள்ளது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எனக்குத் தாங்காதுஎன்ற நிலையிலிருந்து கட்டுப்பாட்டுக்கும் சமத்துவத்திற்கும் போக மூன்று நிலைகளுண்டு. அவை உடற்கவர்ச்சி, உணர்ச்சியின் வேகம், மனம் பொறுக்க முடியாதது. சில சமயங்களில் புறநிகழ்ச்சி உடலை அசைக்கும். அப்படியானால் பின்னர் உணர்வும், மனமும் புற நிகழ்ச்சியால் அதேபோல் பாதிக்கப்படும். நீயே அவற்றை நாடாதது நல்லது. ஆனால் சிறப்பெய்த அவை வெளியிலிருந்து வரும்பொழுது அவற்றால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

*நீயே நாடாதவை பாதிக்காது.*

*அவை அசைத்தால் நீ அசையக்கூடாது.*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இலட்சியத்தை, சுயநலம் பெறும் பலனின் அளவால் நிர்ணயிப்பது சரியில்லை என்றாலும் அதுவும் அளவை நிர்ணயிக்கும் முறைகளில் ஒன்று.

*அன்னை சுயநலத்தையும் ஏற்பார்.*

## P.91 An anthem pealed to the triune ecstasies
## முழுமையான முக்குரல் கீதமாக ஒலித்தது

- ✡ அமரத்துவத்தின் ஆனந்தக் குரலெழுப்பும் நேரம்,
- ✡ பிரபஞ்ச இசையின் பல்லவியின் ஸ்வரம்.
- ✡ வளரும் சுமுகத்தின் கட்டமைப்பு,
- ✡ ரூபமும், குரலும் நிறைந்தெழுந்த நிகழ்ச்சி.
- ✡ கடவுளின் உச்சஸ்தாயியை ஆர்வமாக நாடி,
- ✡ ஜடத்தின் ஆழத்தினின்று ஆத்மாவின் சிகரத்திற்கு,
- ✡ மாறாத அழியாத ஆசனங்கள் மேலுலகக் காட்சி,
- ✡ சொர்க்கலோக ஜோதியின் அரசவைக் காட்சி.
- ✡ ஏகன் வாயிலில் எழுந்து நிற்கும் எழிலுருவம்,
- ✡ பிரம்மம் கடலென விரியும் கற்பனைக் கருவூலம்.
- ✡ பரமார்த்த சொர்க்கம் பவித்திரமான தோற்றம்,
- ✡ அற்புத அதிசய ஜீவியம் விரிந்து மலர்ந்தது.
- ✡ கட்டவிழ்ந்த சட்டத்தின் கரை காணாத இலட்சியம்,
- ✡ பெருமைநிறை இயற்கை பேருதவி செய்யும் பாதை,
- ✡ பூவுலக நேர்த்தியைப் போற்றும் பெருவழி,
- ✡ வலிமையின் அமைதி வற்புறுத்தும் அரங்கம்,
- ✡ அறிவுக்கண் காணாத அழகு நிறை அகம்,
- ✡ விலகும் மூடியின் அரைகுறை அற்புதக் காட்சி,
- ✡ பேரானந்தப் பெருவெளியின் காட்சி திடீரென எழுந்தது.
- ✡ ஞானத்தின் சூரியஒளி சந்திரமண்டல ஆனந்த வாரி,



- ✡ பரந்து விரியும் பூரிப்பு, கை நீட்டி அழைக்கும்.
- ✡ அழியும் உடலின் வறுமையைக் கடந்து,
- ✡ வாயிலைக் கடந்து, வந்த இடத்தில் உறைந்து,
- ✡ கண்காணாத கடலின் கரைகாணாத பிரயாணம்.
- ✡ அறிவுக்கெட்டாத அனந்தம் தரும் ஆபத்தின் கவர்ச்சி,
- ✡ பெருவெளியின் பேரானந்த வேகம்,
- ✡ காலம், இடத்தைக் கடந்த அற்புதம்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு செயல், அது உள்ள நிலையில் (in its own plane) சந்தோஷத்தை உற்பத்தி செய்யுமானால் அந்நிலைக்கு அது சரியான செயலாகும்.

*சந்தோஷப்பட்டால் சரி.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்முடைய அழகைப் போற்றினால், அறிவை மெச்சினால், செல்வத்தைப் பாராட்டினால் நமக்கு ஏற்படும் சந்தோஷம் பெருமைஎன்ற உருவில் வருகிறது.

நம் நல்ல குணத்தை மற்றவர் பாராட்டும் பொழுது நம்முள் எழும் சந்தோஷம் அடக்கவுணர்வை அளிக்கிறது.

*நல்ல குணம் அடக்கம் தரும்.*

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**935) இலட்சியவாதிகள், தீவிரவாதிகள் அரசியலிலும், போரிலும் ஒரே குறியாக தங்களை மறந்து சாதிக்கின்றார்கள். அவர்கள் சாதனை அறியாமையின் சாதனை என்கிறார் பகவான்.**

*அறியாமையின் சாதனை அளவுகடந்த சாதனை.*

✡ *The Life Divine*இல் The என்ற சொல் 31463 முறை வருவதாக கம்ப்யூட்டர் கணக்கெடுத்துள்ளது. இது மனிதனுக்கு எளிதன்று. ஆனால் கம்ப்யூட்டர் வருமுன் இதுபோன்று ஷேக்ஸ்பியரில் சொற்களை scholars ஆராய்ச்சியாளர் கணக்கெடுத்துள்ளனர்.

- ❀ இது அளவுகடந்த சாதனை.
- ❀ இதை அறிவின் சாதனைஎனக் கூறலாமா, அறியாமையின் சாதனை என்று குறிப்பிடலாமா?

✡ மனித வாழ்வு முழுவதும் அறியாமையால் (unconscious) ஆனது என அன்னை கூறுகிறார்.

✡ இலட்சியவாதிகள் எதையும் இலட்சியமாகச் செய்வார்கள்.

✡ தீவிரவாதிகள் எதையும் தீவிரமாகச் செய்வார்கள்.

✡ இலட்சியவாதியும், தீவிரவாதியும் அபூர்வம்.

அவர்கள் சாதனை அறியாமையின் சாதனையெனில் நம்மால் எதையும் சாதிக்க முடியாமலிருக்கிறோம்.

எது அறிவின் சாதனை?

உலகம் முழுவதும் அறியாமையால் செயல்படும்பொழுது எதை அறிவின் சாதனைக்கு உதாரணமாகக் கூறுவது?



- ❀ முழுமையின் சாதனை அறிவின் சாதனை.
- ❀ பகுதியின் சாதனை அறியாமையின் சாதனை.

✡ நாட்டிற்குச் செய்வது முழுமைக்குச் செய்யும் வேலை.

ஒரு துறையில் செயல்படுவது பகுதியில் செயல்படுவது.

சூரியன் பால்பண்ணையில் செய்தது, சுப்ரமணியம் பசுமைப் புரட்சியில் செய்தவை பகுதியில் ஈடுபடுவது.

மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் செய்தது முழுமையில் ஈடுபடுவது.

Tom Peters டாம் பீட்டர்ஸ் சுதந்திரத்திற்காகச் செய்த வேலை நாட்டையே பகுதியாக்கவல்லது.

சம்பாதிப்பவன் குடும்பத்தைப் பாதுகாப்பான் எனினும், சம்பாத்தியம் குடும்பத்தின் பகுதி.

குடும்ப கௌரவம் முழுமை.

பள்ளி, கல்லூரியில் பெருஞ்சேவை செய்யும் ஆசிரியர்கள் பகுதியில் செயல்படுபவர்கள்.

கல்வி முன்னேறப் பாடுபடுபவர்கள் கிளென்டோமான் போன்றவர் முழுமைக்குப் பாடுபடுபவர்கள்.

போர்க்களத்தில் போரிட்ட ஆயிரம் கேப்டன், மேஜர், கர்னல், போன்றவர் பகுதி.

உலகை இருளிலிருந்து விடுவிக்கப் போரிட்ட சர்ச்சில் முழுமையில் தன்னை இழந்தார்.

மிஸஸ் பென்னட் பெண்கள் திருமணத்திற்காக முழுமூச்சுடன் பாடுபட்டது பெருஞ்சேவை என்றாலும் பகுதி.

எலிசபெத் குடும்பம் தாழ்ந்ததுஎன அறிந்து, அதை உயர்த்த தன் மனத்தை உயர்த்தியதால், அவமானத்திலிருந்து குடும்பம் விடுபட்டு, அதிர்ஷ்டத்தில் நுழைந்தது. லேடி காதரீனை மிஸஸ் பென்னட்டால் எதிர்கொள்ள முடியாது. எலிசபெத் குடும்ப முழுமைக்குச் செய்த சேவையிது.

❀ ❀ ❀

**936) தெரிய வேண்டியது தெரியாதது அறியாமை. "நாம் யார்" எனத் தெரிந்து கொள்ள விருப்பப்படாமல், "தான்" - அது**

**- யார்என்பதை மறக்கும் அளவுக்குப் போவது பகவான் விளக்கப்படி அறியாமையாகும்.**

*தெரிய வேண்டியது தெரியாதது அறியாமை.*

- ✡ 20வருஷம் பள்ளித் தலைமையாசிரியராக வேலை செய்து, அப்பள்ளியின் சட்டங்களை அறியாதது அறியாமை.
- ✡ ஓர் ஆபீசில் குமாஸ்தாவாகச் சேர்ந்து, பிரமோஷன் வரும்என 9 வருஷம் காத்திருந்து, பின் டிபார்ட்மெண்ட் டெஸ்ட், அக்கௌண்ட் டெஸ்ட் பாஸ் பண்ணிய பிறகுதான் பிரமோஷன் வரும்என்று ஒருவர் கேள்விப்படுவது அறியாமையாகும்.
- ✡ எட்டாத உயரத்திலிருந்து வரன் வர 25வயதுவரைக் காத்திருந்து, வரன் வாராதபொழுது, இப்படியேயிருந்தால் திருமணமாகாதுஎன அறியாதது அறியாமை.
- ✡ மாமா மகனை "உன் வீட்டை எனக்குக் கொடு" எனக் கேட்பது அறியாமையென அறியாதது அறியாமை.
- ✡ தன் இஷ்டப்படி வாழ்க்கையை நடத்தினால் வாழ்வு சிதையும்என 53ஆம் வயதில் அறியாதது அறியாமை.
- ✡ யார் வீட்டு விசேஷத்திற்கும் போகாதவர், தம் வீட்டு விசேஷத்திற்கு அனைவரும் வரவேண்டும்என எதிர்பார்க்கிறார். அது அறியாமை.
- ✡ முதலில்லாமல் தொழில் செய்ய ஆர்வம் கொள்வது சரியில்லை.
- ✡ பிறர் மனம் புண்படப் பேசி உதவி கேட்பவர் அறிவுடையவரில்லை.
- ✡ தமக்கு ஓர் உதவி வேண்டும்என்றபொழுது யாரிடமிருந்து அதை எதிர்பார்க்கிறாரோ, அவரைக் கூப்பிட்டனுப்பினால் வரமாட்டார்என்று அறியாதவர் உண்டு.
- ✡ பயத்தால் பீடிக்கப்பட்டவர் போலீஸில் வேலை தேடக்கூடாது.
- ✡ இரத்தத்தைக் கண்டு மயக்கமடைபவர் டாக்டராக முயலக்கூடாது.
- ✡ பெரும்பணக்காரர் மகனிடம் பொறுப்பைக் கொடுத்தபின் மரியாதை எதிர்பார்ப்பது நடப்பதில்லை.



இது போன்று அளவற்ற காரியங்களுண்டு. அவற்றுள் ஈடுபட்டு தம்மை மறப்பவர் பலருண்டு. பொதுவாக மனிதன் அப்படிப்பட்டவன். நாம் இவற்றை அறியாமைஎன்கிறோம். பகவான் இவற்றை (unconsciousness) கண்மூடித்தனம் என்கிறார்.

டார்சி உயரமானவன், ஓரளவுக்கு அழகானவன்.

£2000 வருமானமுள்ள பென்னட் ஊரில் £10,000 வருமானமுள்ள தனக்கு மரியாதை இருக்கும்என நினைக்கிறான்.

£50 வருமானமுள்ள எலிசபெத் தன்னைத் தயாராக மணப்பாள் என நினைக்கிறான்.

எவருடனும் பழகாவிட்டால் அது தனக்கு மரியாதையென நினைக்கிறான்.

£4000 வருமானமுள்ள பிங்லி £10,000 வருமானமுள்ள தனக்குக் கட்டுப்படுவான்என்று நினைக்கிறான்.

பிங்லியின் சகோதரி எந்த நேரமும் தன்னைத் திருப்திபடுத்த நினைப்பதுபோல் மெரிடன் கிராமத்தில் அனைவரும் நினைப்பார்கள் என நினைக்கிறான்.

பிங்லியுடன் 10 மாதம் கழித்துத் திரும்பி வந்த பொழுது கிட்டிக்குத் தான் யார்என்று தெரியவில்லைஎன அவனுக்குத் தெரியாது.

"நான் டார்சியை மணக்க முடிவு செய்துள்ளேன்" என எலிசபெத் தகப்பனாரிடமும், தமக்கையிடமும் கூறிய பொழுது இருவரும் கசந்து எதிர்த்தார்கள்என டார்சிக்குத் தெரியாது. தன் மனம் இரவு பகலாக எலிசபெத்திற்காக ஏங்குவது போல் எலிசபெத் தனக்காகக் காத்திருப்பாள்என எதிர்பார்க்கிறான்.

*உலகை மறந்து உள்ளுணர்வில் கலந்து மனச்சாட்சியுடன் போராடி உறக்கமின்றி, நிம்மதியின்றி எதையும் கவனிக்காமல் வேதனைப்படும் தன் நிலையை ஏற்று எலிசபெத் பாராட்டுவாள் என்ற கனவுலகில் டார்சி சஞ்சரிக்கிறான்.*

அவள் அவனை மறுக்கிறாள்.

"உன்னைத் திருமணம் செய்ய நான் சம்மதிக்கமாட்டேன்.

நீ கர்வி, சுயநலம், உதாசீனம் செய்யும் உதவாக்கரை.

உன்னை மணக்கும்படி என்னை எவராலும் கூற முடியாது” என்ற பொழுது தன் நிலையறிந்து தன் அறியாமையை டார்சி உணர்கிறான்.

உலகின் நிலையறியாமல் உள்ளே சென்று மறந்த நிலை unconscious அறியாமையென்பது பகவான் விளக்கம்.

❀ ❀ ❀

**937) மனத்தில் நெறியின்றி திருமணமாகாமலிருப்பது உணர்வை விஷமாக்கி வக்ரமாக்கும். தூய்மையான மனம் உடலில் தன் நெறியை கற்பாகவோ, பிரம்மச்சரியமாகவோ வெளிப்படுத்தினால் உணர்வின் நிறைவு உடலின் சுவையாகி அன்னை ஜீவியத்தை வெளிப்படுத்தும்.**

***உணர்வின் நிறைவு உடலின் சுவையாவது அன்னை ஜீவியம்.***

உணர்ச்சிஎன்பது இரு வகைப்படும். உயர்ந்த உணர்ச்சி இதயத்திற்குரியது (feeling, emotion). தாழ்ந்த உணர்ச்சி நரம்புக்கு உரியது. இது கிளர்ச்சி.

- ✡ **உணர்ச்சி பெருகுவதால் உள்ளம் உயரும்.**
- ✡ **கிளர்ச்சி பெருகி தளர்ச்சியை உண்டு பண்ணும்.**

மேல்நாடுகளில் திருமணம் பெரும்பாலும் மறைந்து வருகிறது. இந்தியாவில் விவாகரத்து அமெரிக்காவில் 1950இல் இருந்ததைப் போல் வளர்கிறது.

**சமூகம் எவ்வளவு மாறினாலும் காலத்திற்கேற்ப**
**மக்கள் மாறிக்கொள்வார்கள்.**

பொதுவாக, காலம் மாறும்பொழுது மக்களுக்குப் பிரச்சினை நிரந்தரமாக இராது. ஆனால் கற்பு, பிரம்மச்சர்யம், விஸ்வாசம், உண்மை, நியாயம், நாணயம் ஆகியவை காலம் மாறுவதால் பாதிக்கப்படுவதில்லை. அவை காலத்தைக் கடந்தவை. சத்து, சித்து, ஆனந்தம், அனந்தம், சாஸ்வதம், மௌனம், சாந்தி, சத்தியம்



ஆகியவை என்றும் அழியாதவை. அவற்றிலிருந்து எழுவதால் இப்பண்புகள் அழியாதவை.

- ✡ **கற்பு பண்புஎனில் அது பெண்ணுக்கு மட்டும் உரியதில்லை. அனைவரும் ஏற்காத பண்பு, பண்பாகாது. ஒரு வரலாற்று ஆசிரியர் கற்புஎன்ற சொல் எல்லா மொழிகளிலும் பெண்ணுக்குரியது. ஆணுக்குக் கற்புஎன்ற சொல் எந்த மொழியிலும் இல்லைஎனவும், சொத்து உரிமைக்காக ஏற்பட்ட சொல்எனவும் அதை விவரிக்கிறார்.**
- ✡ **ஆன்மீக வாழ்வில் கற்பு, பிரம்மச்சரியம்என்பவை உயர்ந்த கருத்துகள். கற்புஎன்பது நெறி. எந்த நெறியும் உயர்ந்தது, உயர்ந்த பலன் தருவது. பிரம்மச்சரியம் கல்விக்கு இன்றியமையாதது. அதுவும் ஆன்மீகக் கல்வி பயில பிரம்மச்சர்யம் அத்தியாவசியம். நெறிஎன்பதை விரதம், கட்டுப்பாடுஎனலாம்.**

***எந்த விரதத்திற்கும் உயர்ந்த பலனுண்டு.***
***கற்பு நெறி நெறிகளில் உயர்ந்தது.***
***பெய்யென மழை பெய்விக்கக்கூடியது.***

- ✡ **நெறிஎன்பது நல்லது, கெட்டதைப் பிரித்து, கெட்டதை விலக்கி, நல்லதை முழுவதும் பயன்படுத்த முனைவது. நல்லதை நாடினால் கெட்டது உடன் வரும்என்பது ரிஷிகள் அனுபவம். அதனால் நெறி என்பது நல்லதையும், கெட்டதையும் விலக்கி, உணர்ச்சியற்று செயல்படுவது. இதுவரை தவம் அப்படிப்பட்டது. அது பெற்ற பலன் பிரம்மாண்டமானது, மோட்சம்.**
- ✡ **பகவான் வழி நல்லதையும், கெட்டதையும் மனம் ஏற்றால் தவறு வரும். மனத்தை விலக்கி, ஆன்மா ஏற்றால் கெட்டதானாலும் நல்லதேவரும் என்றார். கற்பின் அடிப்படை விஸ்வாசம், உடலும் மனமும் தூய்மையாக இருப்பது. அதைச் சாதிக்க நாம் நடைமுறையில் பல கட்டுப்பாடுகளை ஏற்று, பலவற்றை விலக்குகிறோம்.**

***எதையும் விலக்காமல் எல்லாவற்றையும் நல்லதாக***
***ஆன்மாவில் ஏற்றால் கற்பின்நிலை உயரும்.***

பெண்கள் வேலைக்குப் போக ஆரம்பித்தபின் நிலைமை இது

போல் சற்று மாறியுள்ளது. இந்நிலையில் மனமும், உணர்வும், உடலும் தூய்மையானால், ஆண்மகனும் அதுபோன்ற தூய்மையை நாடினால் கற்புஎன நாமறிவது நெஞ்சை நிறைவு செய்து, நாடி நரம்பில் சென்று உடலையும் அடைந்து ஆன்மீகச் சுவையெழும். மாடு நெல்லை, அரிசியை சாப்பிடும். நாம் அரிசியை சமைத்து, சாதமாகச் சாப்பிடுகிறோம். அதையே பொங்கல், சர்க்கரைப் பொங்கல், புலவு என்றும் சாப்பிடுகிறோம். அரிசியிலிருந்து பொங்கல் வரை ருசி மாறும். கற்பு இன்று அரிசி போலானால், கற்பின் உயர்ந்த கட்டம் சர்க்கரைப் பொங்கல், புலவு போல் உயரும்.

தொடரும்.....

❀ ❀ ❀

### ஜீவிய மணி

**நடந்ததின் பயன்பெறுவது ஆத்மா.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பொங்கி வழியும் சக்தி நிறைவளிக்கின்றது. நம் நிலைக்குரிய சக்தி தாழ்ந்த நிறைவையளிக்கும். அடுத்த உயர்ந்த நிலைக்குரிய சக்தி, இந்நிலையில் உயர்ந்த நிறைவைத் தரும்.

*(உ.ம்.)*

*(1)* வயிறு நிறைய உணவு → அன்போடு பரிமாறும் உணவு.

*(2)* எண்ணங்கள் நிறைந்த மனம் → மௌனம் குடிகொண்ட மனம்.

***நிறைவு நிலைக்குரியது.***





**Kennedy's death is a setback to the entire history of the earth**

**பூமாதேவியின் வரலாற்றிற்கே ஒரு தடையாக கென்னடி மரணம் அமைந்தது** – *அஜெண்டா*

✡ உலக வரலாற்றில் முன்னேற்றும் நிகழ்ச்சிகளுண்டு. அவை புரட்சிகள். அவற்றைத் தடைசெய்யும் நிகழ்ச்சிகளுண்டு.

- ❀ ஏசுவை சிலுவையிலறைந்தது.
- ❀ இந்தியாவில் ஜாதியையும், தீண்டாமையையும் உற்பத்தி செய்தது.
- ❀ உலகப் போர்கள்.
- ❀ நாடு அடிமைப்படுவது.
- ❀ இயற்கையின் அட்டகாசமான பூகம்பம், புயல், கடல்கொந்தளிப்பு போன்றவை.

✡ கென்னடியின் மரணமும், குருஷேவின் பதவி இழப்பும் அதுபோன்றவை என்கிறார் அன்னை.

கென்னடியின் நண்பர் அன்னையை சந்தித்தார்.

அன்னை சத்தியஜீவியத்தைப் பற்றிப் பேசினார்.

சத்தியஜீவியம் ஒருவருக்கு சித்தித்ததை எப்படி அறியலாம்என அவர் கேட்டார். அன்னை மூன்று அடையாளங்களைக் கூறினார். அவை,

- ❀ **Supreme பரமாத்மாவை அடைவது.**
- ❀ **சமத்துவம்.**
- ❀ **பிரம்மம் சித்திப்பது.**

கென்னடி அன்னையை தரிசிக்க அவர் ஏற்பாடு செய்ய விழைந்தார்.

அந்த நேரம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கென்னடி அன்னையை தரிசித்திருந்தால், உலகம் விரைவாக முன்னேறி-யிருக்கும்.

அதைத் தடைசெய்த தீய சக்திகள் செய்த சூட்சுமம் கொலை.

✡ குருஷேவுக்கு 29 வயது வரை எழுதப் படிக்கத் தெரியாது.

அதன்பின் படித்து உலக வல்லரசின் தலைவரானார்.

ஆரோவில்லைப் பற்றிக் கேள்விப்பட்டு, ஆதரவுதர சம்மதித்தார்.

குருஷேவின் ஆதரவு ஆரோவில்லுக்கிருந்திருந்தால், வரலாற்றின் போக்கு மாறியிருக்கும்.

அந்த நேரம் அவர் பதவியை இழந்தார்.

அதுவும் தீய சக்திகளின் செயல்என்கிறார் அன்னை.

✡ இந்தியா ஜகத்குருவாவது சத்தியஜீவன் பிறப்பதற்கு அவசியம்.

பகவான் ஸ்ரீ அரவிந்தரின் 4ஆம் கனவு ஜகத் குரு.

நாடு ஒன்றுபடாமல் ஜகத்குருஆக முடியாதுஎன்பதால் 800 ஆண்டுகட்குமுன் முஸ்லீம் படையெடுப்பும், 200 ஆண்டுகட்குமுன் ஆங்கிலேயர் படையெடுப்பும் நடந்தன.

1947இல் நாடு முழுமையடைந்தது. அன்னை அம்முழுமையில் பர்மா, மலேசியா, சிங்கப்பூர், பூடான், நேப்பாள், சிக்கிம், அந்தமான், இலங்கை ஆகியவற்றையும் சேர்த்துவிட்டார்.

நாட்டுப் பிரிவினை இந்தியா ஜகத்குருவாவதை ஒத்திப்போட்டுவிட்டது.

கென்னடி, குருஷேவுக்கு நடந்ததைப் போன்ற நிகழ்ச்சி பாக்கிஸ்தான் ஏற்பட்டது.

25 ஆண்டில் பாக்கிஸ்தான் பிரியும்என்றார் பகவான்.

25ஆம் ஆண்டு பங்களாதேஷ் உற்பத்தியாயிற்று.

✡ 1916இல் ஐரோப்பிய நாடுகள் இணையும்என்றார் பகவான். 50 ஆண்டுகள் கழித்து அது நடந்தது.

✡ வரலாறு முன்னேறும் நிகழ்ச்சிகள் பல.



அதைத் தடை செய்யும் நிகழ்ச்சிகள் சில.

கென்னடியின்மரணம் அந்த வகையைச் சேர்ந்தது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகம் தனி மனிதனுக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. மனிதன் தன் இஷ்டப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான். பொருள்களைச் சமூகம் உற்பத்தி செய்கிறது. மனிதன் தன் வாழ்க்கையைத் தானே நிர்ணயித்துக் கொள்கிறான்.

***உற்பத்தி சமூகத்திற்கு; வாழ்க்கை மனிதனுக்கு.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூக அந்தஸ்தை நிர்ணயிப்பது படிப்பு. படிக்கும்பொழுது அந்த வயதிற்குரிய கவர்ச்சிகள் ஏராளமாக நம்மை ஈர்க்கும். அவற்றைக் கடப்பவருக்கே படிப்பு, பட்டம். படிப்பு முடிந்த பின், படிக்காத பழைய நண்பர்களுடன் சகஜமாகப் பழக முடியாது. எந்த வாழ்வோடு (social stratum) நாம் கலந்து கொள்ள முடியவில்லைஎன்று நிச்சயமாகத் தெரிகிறதோ, அதன் கவர்ச்சிகள் ஆயிரம். அதுவே பக்தனுடைய நிலையும்.

***வயதிற்குரிய கவர்ச்சிகளைக் கடந்தால் படிப்பு;***
***சமூகத்தின் கவர்ச்சிகளைக் கடந்தால் பக்தி.***

# தொலைந்த பொருள்

கர்மயோகி

✡ நாம் வளர்க்கும் நாய் நம்மீது பாசமாக இருப்பதைப்போல நாம் பயன்படுத்தும் பொருள்கள் நம் மீது பாசமாக இருக்கின்றன.

- பாசம் உள்ளவை, நம்மை விட்டுப் போகா.
- பயன்படுத்துவது பாசத்தைக் காட்டும்.
- உபயோகத்தைப் பொருள்கள் கவனமாகக் கருதுகின்றன.
- பயன்படுத்தாவிட்டால் கவனம் குறைந்துவிடும்.
- கவனம் குறைந்தால் ஒரு நேரம் மறந்துவிடும்.
- **மறந்த நேரம் பொருள் தொலையும்.**
- தொலைவது மறதியைக் காட்டும்.
- தொலைவதன் தத்துவத்தில் இது ஓர் அம்சம்.
- தொலைவதற்குக் காரணங்கள் பல.
- முடிவில்லாமல் காரணங்களைக் கூறலாம்.
- எந்தப் பொருளும் அனந்தம்.
- அது எல்லாப் பொருள்களுடனும் தொடர்பு கொண்டது.
- அதற்கு உலகிலுள்ள எல்லா அம்சங்களும் உண்டு.
- அதைத் திருப்பிப்பெற எந்த அம்சத்திற்குரிய முறையும் பயன்படும்.
- மனம் அதிக மகிழ்ச்சியால் ஒரு விஷயத்தில் திளைத்தால், மற்றது மறந்துபோகும்.

  அதிக சோகத்தாலும் அது நிகழும்.

  மன வளர்ச்சியால் நாம் நம் நிலையை விட்டகன்றால் பழைய நிலைக்குள்ளவை மறந்துபோகும்.

  நிலைமை மாறி நாம் செய்யும் செயல்கள் ஒரு பொருளுக்கு எதிரானால், அப்பொருள் நம்மை விட்டு விலகும்.

  அது கோபத்தால் விலகுவது.



சுத்தத்தை அதிகப்படுத்தினால், அசுத்தமானபொருள் தொலையும்.

அசுத்தம் அதிகமானால், சுத்தமானபொருள் தொலையும்.

உயர்வாகக் கருதிய பொருளை மட்டமாகக் கருதினால் அது விலகும்.

ஒரு நேரம் கோபத்தில் ஒரு பொருளைத் தூர எறிந்தால், நேரம் வரும்பொழுது அது திடீரென மறையும்.

ஒரு பொருளுக்கு நேர் எதிரான பொருளை அதிகமாகப் பாராட்டினால் அப்பொருள் நம்மை விட்டுப் போக முடிவு செய்யும்.

வயதாவதாலோ, திறமை குறைவதாலோ, பொதுவாகக் கவனம் குறைந்தால் அடிக்கடி பொருள் தொலையும்.

உயர்ந்தவன் தாழ்ந்ததின் மீது ஆசைப்பட்டால், உயர்ந்தது விலகும்.

செய்ய வேண்டிய கடமையை இடம் மாற்றி தகுதியற்றவர்க்குச் செய்தால், தகுதியுள்ளவர் விலகுவார், அல்லது தகுதியற்றவர் விலகுவார், அல்லது தகுதி நிரந்தரமாக விலகும்.

தொலைவதின் காரணங்கள் பல.

அதே போல் மீண்டும் பெறும்வழிகளும் பல.

காரணமறிந்து, காரணத்தை மாற்றி, தொலைந்த பொருளைப் பெறுவது எளிய வழி.

எதையும் நேரெதிராகச் செய்பவர் செய்யும் எல்லா வேலைகட்கும் எதிரான பலனிருக்கும்.

இடம், பொருள், காலம், காரணம், சம்பந்தப்பட்டவர், குறிப்பிட்ட எண்ணங்கள், பொதுவான நிலை, ஆகிய எதிலும் மீண்டும் பெறும் வழிகள் பிறக்க முடியும்.

*வழி எதுவானாலும் பொருள் கிடைக்கும்.*

*செய்வது முழுமையாக இருக்க வேண்டும்என்பது நிபந்தனை.*

எந்தப் பொருளுக்கும் நம் மனத்தில் ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் இடம் உண்டு.

அங்கிருந்து அன்னையை அழைத்தால் பொருள் கிடைக்கும்.

பொதுவாக நேரமே சரியில்லையெனில், நேரம் மாறும்வரை காத்து இருப்பது அவசியம்.

ஆழ்ந்து அன்னையை அழைத்தால் நேரம் மாறும்.

சரியில்லாத நேரம் ஆழ்ந்து அழைப்பது சிரமம்.

சிரமம் மாறி அழைத்தால் நேரம் மாறும்.

பொருள் மீது அன்னை உருவம் கற்பனையில் தெளிவாகத் தெரிந்தால், பொருள் எங்கிருந்தாலும் புறப்பட்டு நம்மை நாடிவரும்.

அன்னையை நினைத்தால் பொருளை மறந்ததைப் பொருள் மறந்து மன்னிக்கும், திரும்பிவரும்.

அடுத்தவர் பொருள் தொலைய விரும்பினால், நம் பொருள் தொலையும்.

பொறாமையால் கெடுதல் செய்வதுபோல் பிரியத்தாலும் கெடுதல் செய்யலாம்.

திருட்டுப் பொருள் கையில் வந்தால், உள்ள பொருள் தொலையும்.

திருட ஆசைப்பட்டால், திருடனுக்குக் கூடிவரும்.

நல்லவன் திருட ஆசைப்பட்டால், உள்ளது போகும்.

பாக்கியான காணிக்கை திருட்டுப் பொருள்.

அன்னையின் பொருளை நாம் அனுபவிக்க நினைப்பது திருட்டு.

சொன்ன காணிக்கையை மறுப்பது பெருந்திருட்டு.

பொருள் தொலைந்ததற்கு நாம் செய்த தவறு நினைவு வாராது.

வந்தால் பொருட்படுத்தமாட்டோம்.

அந்த நிலையில் பொருள் கிடைக்கும்வரை அழைப்பைத் தொடர்ந்தால், நாளதிகமாகும், ஆனால் கிடைக்கும்.

தொலைந்த பெரிய பொருள் கிடைத்தால் சிறிய பொருளும் கிடைக்கும்.

பெரியது கிடைத்தால், சிறியது தொலையும்.

சிறியது தொலைந்தால், தொடர்ந்து பெரியது தொலையும்.

அளவோடு திறமையுள்ளவர்க்கு ஒன்று கிடைத்தால், அடுத்தது போகும்.

அளவுகடந்த திறமையுள்ளவர்க்கு ஒன்று வந்தால், அடுத்தது வரும்.

பிரார்த்தனையால் தொலைந்த எதையும் பெறலாம்என அகந்தையான



நினைவு எழுந்தால் பொருள் தொலையும்.

அந்த நேரம் பிரார்த்தனை எளிதில் பலிக்காது.

கர்வமழிந்தால் பொருள் கிடைக்கும்.

அடிக்கடி பொருள்களைத் தொலைப்பவர் மீது பாசம் ஏற்பட்டால் நம் பொருள் தொலையும்.

பொருள் தொலைவதற்குக் காரணம் unconsciousness மறதி.

அன்னை மறந்தால், பல பொருள்கள் ஒரே சமயத்தில் தொலையும்.

தொலைந்த பொருள் கிடைக்க வேண்டும்என்ற பிரார்த்தனையையே கைவிடும் அளவுக்கு அன்னையைமட்டும் நம்பி, பிரார்த்தனையை மறந்தால், பொருள் திரும்பிவரும்.

ஆழ்ந்த தியானத்தில் பொருள் உள்ள இடம் கண்ணுக்குத் தெரியும்.

கண்ணுக்குத் தெரியாவிட்டால், கை தானே அங்குப் போகும்.

வேலை செய்யப் பிரியப்படாதவரை வேலை செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்தினால் அவர் செய்த வேலைகள் கெட்டுப்போகும், அப்பொருள்கள் தொலையும்.

நன்றியுள்ள நல்லவருக்கு ஒரு நல்லது செய்தால், நன்றி மறந்ததால் தொலைந்த பொருள் நம்மை நாடிவரும்.

ஒருவருக்குச் செய்த நல்லது அனைவருக்கும் செய்த நல்லதாகும்.

மனம் ஒரு விஷயத்தில் மாற வேண்டி ஒரு பொருள் தொலைந்தால், அது மாறும்வரை பொருள் கிடைக்காது.

ஒழுங்கில்லாத இடத்தில் தொலைந்த பொருள் ஒழுங்கு ஏற்படும்வரை கிடைக்காது.

*தொலைந்த பொருளை அன்பாக அழைத்தால் குரல் கேட்டுத் திரும்பிவரும்.*

தொலைந்த பொருளைச் சேர்ந்த பொருள்களை அடுக்கி வைத்து, இல்லாத பொருளுக்கு இடம் ஏற்படுத்தினால், அவ்விடத்திற்கு அப்பொருள் தானேவரும்.

உரிய இடம் குரல் கொடுத்து அழைக்கும்.

கிடைக்கவில்லை என்பது இல்லை.

போதுமான முயற்சி அக்கரையில்லை என்பதுண்டு.

தொலைக்கும் பழக்கம் தொலைவது நல்லது.

எல்லாம் சரியாக இருந்து ஒரு முக்கியக் குறையிருந்தால் தொலைந்த பொருள் தொலைந்த இடத்திற்கோ, அல்லது அதற்குப் புதிய நிலையில் உரிய இடத்திற்கோ நம் பிரார்த்தனையால் போய்ச் சேரும்.

அது கிடைத்தது நமக்குத் தெரியாது.

அதற்குரிய உபயோகம் எழும்நேரம் அங்கே அப்பொருள் காத்து இருக்கும்.

பிரார்த்தனை பிரச்சினையைத் தீர்த்தாலும், நம் குறை அது தீர்ந்ததை அறிவதைத் தடுக்கும்.

அந்தநேரம் பொருள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், கிடைத்ததுபோன்ற உணர்வு எழுந்து மன நிறைவு பெறும்.

T.V. போட்டபொழுது தொலைந்த பொருள் கிடைக்கும் நேரம் ஒருவர் T.V. போடுவதைக் காணலாம்.

தொலைந்த செயலுடன் தொடர்புள்ள செயலுக்கு அச்சக்தியுண்டு.

“இப்பொருள் தொலையக்கூடாது. அவசியம் கிடைக்க வேண்டும்” என்று ஒருவர் அழுத்தம்திருத்தமாக, ஆணித்தரமாக நினைத்தால், அவர் நினைக்கும்நேரம் அது கிடைக்கும்.

நினைத்ததைச் சொன்னால் பலிக்கும்.

நினைத்ததைச் சொல்ல அனுமதியற்றவர் சொன்னால் சொன்னதால் பலிக்காது.

அப்பொருளின் பெயரைச் சீட்டில் எழுதி அன்னை படம் முன்னால் வைத்தால், அது பொருள் கிடைக்க வழி செய்யும்.

பொருளோடு எந்தத் தொடர்பு கொண்டாலும் பொருள் திரும்ப வரும்.

அத்தொடர்பு அன்னை மூலமிருந்தால் அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

உள்ளம் உருகினால் பொருள் திரும்ப வரும்.

❀ ❀ ❀



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N. அசோகன்**

341. உடலளவில் தாமசம்என்பது நகர மறுப்பதைக் குறிக்கும். உணர்வு அளவில் தாமசம் வேலை செய்ய மறுக்கும்விதமாக வெளிப்படும். அறிவு நிலையில் புது அறிவை தேடிக்கொள்ள மறுப்பதாக வெளிப்படும். ஆன்மீக நிலையில் இறைவனை நோக்கி உயர மறுப்பதாக வெளிப்படும்.

342. நம்முடைய நிலையிலிருந்து கீழ் இறங்கிவிட்டோமென்றால் பழைய நிலைக்குத் திரும்பி வருவதற்கு நாம் முயற்சியை இரு மடங்காக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுது கீழ்த் திசையை மாற்றி மேல் திசைக்குப் போக வேண்டியிருப்பதால் சக்தி இரு மடங்கு தேவைப்படுகிறது.

343. ஒருவர் சாதித்தார் எனும்பொழுது அதை நாம் positiveஆக எடுத்துக் கொள்கிறோம். ஒருவருக்கு வெற்றி கிட்டியதுஎன்றால் நல்ல வழியில்தான் அந்த வெற்றி கிடைத்தது என்று சொல்வதற்கில்லை.

344. பிடிவாதம்என்பது இரு வகைகளில் வெளிப்படும். உயர்ந்த பண்புகளை விட்டுக்கொடுக்காமல் திடமாக இருக்கும்பொழுது அது நல்லவிதமாக வெளிப்படுகிறது. அதே சமயத்தில் நமது மட்டமான குணங்களையும், பழக்கவழக்கங்களையும் விடமறுக்கும்பொழுது தவறாக வெளிப்படுகிறது.

345. நம்மிடம் இருக்கின்ற விஷயங்களைத்தான் நாம் அடுத்தவரிடம் அடையாளம் காணமுடியும். நேர்மையான ஒருவருக்கு அடுத்தவர் நேர்மையற்றவர்என்பது கண்ணில் படாது.

346. ரகசிய மனப்பான்மை நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறது. ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் ரகசியம் நம் குறிக்கோள்களை எட்ட உதவும். இருந்தாலும் யாரையும் நம்பாத மனநிலை மனதில் ஓர் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும்.

347. தன்னுடைய சாதனைகளைப் பற்றிப் பெருமையடித்துக்கொள்ளாதவன் தன்னுடைய எனர்ஜியை சேகரம் செய்கிறான். அதனால் அவனால் மேலும் சாதிக்க முடிகிறது. பெருமையடிக்கின்றவன் தன்னுடைய எனர்ஜியை விரயம் செய்கிறான். அதனால் மேற்கொண்டு முன்னேற முடியாமல் தேங்கிப்போகிறான்.

348. தகுதியுடையவர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே வெகுமதிகள் தேடி வரும். தகுதியில்லாதவர்கள்தான் எந்நேரமும் கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருப்பார்கள்.

349. தாழ்வு மனப்பான்மையால் பாதிக்கப்பட்டவர்கள் அதனால் உந்தப்பட்டு சாதிப்பதுண்டு. இருந்தாலும் தாழ்வு மனப்பான்மை நம்முடைய எனர்ஜியை எல்லாம் விரயம் செய்யுமென்பதால் அது நல்லதில்லை.

350. அப்பாவியான, விவரம் தெரியாத மக்கள் பொதுவாக மற்றவர்களால் ஏமாற்றப்படுகிறார்கள். வாழ்க்கை பொய்மை நிறைந்திருப்பதால் கள்ளம் கபடமற்ற தன்மை ஒரு பலகீனமாக போய்விடுகிறது. வாழ்க்கை positiveஆக இருந்தால் இதே கள்ளங்கபடமற்ற தன்மை பாராட்டைப் பெற்றுத் தரும்.

351. இன்பத்தைத் தேடுபவர்களுக்குத் துன்பமும் சேர்ந்தே வரும். ஏனென்றால் இவையிரண்டும் ஒன்றை ஒன்று பிரியாது. நிழலில்லாத வெளிச்சம் இல்லைஎன்பதுபோல் துன்பம் இல்லாத இன்பம் இல்லை.

352. உயர்ந்த நிலையில் இருப்பவர்களை நாம் பகைத்துக்கொண்டால், தண்டனை உடனே கிடைக்கும். அதே சமயத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் தவறு செய்தால் அவர்களுக்குரிய தண்டனை தாமதமாகத்தான் வரும்.

353. கொடையாளியும், கருமியும் வாழ்க்கையின் இரு எதிர்முனைகள். கொடையாளி இயற்கையின் செலவு செய்யும் அம்சத்தை வெளிப்படுத்துகிறான். கருமி இயற்கையின் சேகரம் செய்யும் அம்சத்தை வெளிப்படுத்துகிறான். இயற்கை இருவரையும் சமமாகவே பாதிக்கிறது. மனிதன்தான் கொடையாளியை போற்றுகிறான், கருமியை மட்டமாக நினைக்கிறான்.

354. தாமசத்தை நாம் முழுவதுமாக விலக்கக்கூடாது. அறிவின் சூட்சுமமும் உணர்வின் வேகமும் உடம்பின் திட்பத்தால் தடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் உணர்வின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும்.

355. தவறான குணங்களையும், எண்ணங்களையும் நாம் அடக்கி வைத்து இருப்பதால் அவை மறைந்துவிடுவதில்லை. சரியான சூழ்நிலை அமைந்தால் இதே குணங்கள் இரு மடங்கு வேகமாக வெளிப்படும். ஆகவே பரிசுத்தத்திற்கு அடக்கி வைத்தல் தகுந்த முறையில்லை. தெய்வீக ஒளி மற்றும் அருளின் பலத்தை வைத்துக்கொண்டு அவற்றைக் கரைப்பதுதான் நிரந்தரத் தீர்வு.



356. அதிகாரம் ஒரு வகையில் பணத்தைவிடப் பெரியது. ஏனென்றால் அதிகாரத்திலுள்ளவர்கள் வேகமாகப் பணம் சம்பாதித்துவிடுகிறார்கள். ஆனால் பணபலம் உள்ளவர்கள் அவ்வளவு வேகத்தில் பதவிகளைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. அதிகாரத்தில் இருப்பவர்களுக்குப் பின்னால் பணபலம் உள்ளவர்கள் ஆதாரமாக இருப்பார்கள். ஆனால் அதிகாரிகளுக்குப் பக்கபலமாக இருப்பது அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதாக அமையாது.

357. பணம், பதவி, காமம் ஆகியவை மனிதனை எப்படி ஆட்டிப்படைக்-கின்றனவோ அதே அளவிற்குப் புகழ்மோகமும் மனிதனை ஆட்டிப்படைக்கும். இவை நான்கிற்கும் அடிமையாகாதவர்களைக் காண்பது அரிது.

358. குழந்தை பிறப்பதற்கு உடலுறவு தேவைப்படுகிறதென்றாலும், அதில் அதிகமாக ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் குறைகிறது. பிரம்மச்சாரிகள் நீண்ட நாள் வாழ்வதைப் போல இல்லறத்தில் ஈடுபடுகின்றவர்கள் வாழ்வதில்லை.

359. ஆன்மீகப் பரிசுத்தம்என்பது தெய்வீக உணர்வுகளை மட்டும் அனுமதிக்கின்ற மனநிலையை குறிக்கும். அகந்தை முழுவதும் கரைந்திருந்தால்தான் இத்தகைய பரிசுத்த மனநிலை அமையும்.

360. பெருந்தெய்வங்கள்தான் பரிசுத்தத்தை எதிர்பார்க்கின்றனஎன்று இல்லை. இறை விரோத சக்திகளாகச் செயல்படுகின்ற சிறு தெய்வங்கள்கூட தம் பக்தர்களிடம் பரிசுத்தத்தை எதிர்பார்க்கின்றன. பரிசுத்தம் தவறினால் அவர்களைத் தண்டிக்கவும் செய்கின்றன.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமர்ப்பணம், ஜோதியை நாடுவதால் ஆரம்பம் - விரிவு - முடிவுஎன்ற மூன்று நிலைகளைச் சுருக்கி முடிவான பலனை முதலில் கொடுக்கிறது.

***முடிவான பலனை முதலில் தரும் சமர்ப்பணம்.***

# சாசனம்

வி.ரமேஷ்குமார்

மும்பை மேரிடன் ஹோட்டல். பன்னிரண்டாவது மாடி பால்கனியில் இருந்து பார்த்தபோது எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத சூரியோதயம். உள்ளே திரும்பினால் அதையும் தாண்டிய அதிசயமாய் அன்னையின் புன்முறுவல். கண்ணாலேயே கட்டிப்போடும் அந்த வாஞ்சையில் நெகிழ்ந்தேன்.

''இந்த உயரத்திற்கு வருவோம்என்று என்றாவது நினைத்தீரா, ராஜன்?''

''எதை? பன்னிரண்டாவது மாடியை சொல்கிறீரா?'' ஜோக் அடித்தார் ராஜன். ''அன்னையிடம் வந்தபிறகு உயரம் ஒரு பொருட்டன்று. நம் பண்புகளுக்கு ஏற்ற உயரத்தை நிச்சயம் கொடுப்பார். நாம் மூன்று வருடங்களுக்குமுன் இருந்ததுபோல ஒரு சூப்பர்வைசராக இருக்க விரும்பியிருந்தால் இந்த ஆடம்பர அறையும், அழைக்க பென்ஸ் காரும் வருமா? நமக்கே தெரியும் நம் நிலை. பிரார்த்தனையில்கூட இதைக் கேட்டிருக்கமாட்டோம்...''

உண்மைதான். அன்னை பண்புகள் மூலம் அதிகம் பலிக்க முடியும்என்பதைப் புரிந்துகொள்ள நாங்கள் பட்ட பாடு.... என் நினைவு பின்னோக்கிச் சென்றது.

✡✡✡✡

அது மெலிதாய்த் தூறிக்கொண்டிருந்த ஒரு நவம்பர் மாத மழைக் காலம். மலையளவு பிரச்சினைகளுடன் அன்னையிடம் வந்தபோது, 'அது எனக்குத் துரும்பு' என்று கிள்ளிப் போட்டு என்னை ஆட்கொண்ட நேரமது.

ராஜனும் நானும் பேசிக்கொண்டிருந்தோம். ''எல்லாம் சரி, அன்னையிடம் வந்தால் அது செய்வார்.... இது செய்வார்.... என்கிறார்களே..... பிரச்சினைகள் தீர்ந்து, நிம்மதி வந்தது.... சரி. அதன்பிறகு ஒரு முன்னேற்றமும் இல்லையே.... தினமும் பிரார்த்தனை செய்கிறோம், புஷ்பாஞ்சலி செய்கிறோம்.....'' உதட்டை பிதுக்கினேன்.



''இதற்கெல்லாம் சரியான பதில் தரக்கூடியவர் கிருஷ்ணன் தான்'' என்ற ராஜன் ஆட்டோவை அழைக்க, கிருஷ்ணன் வீட்டில் இறங்கினோம். கிருஷ்ணன் அன்னை சேவகர். அன்னையின் சட்டங்களைப் புரிய விளக்குவதில் வல்லவர். கேள்விகளைக் கேட்டோம். சிரித்தார்.

''வருமானம் அதிகமாக வேண்டும். இதைத்தானே சுற்றி வளைத்துக் கேட்கின்றீர்கள்?''

அசடு வழிந்தோம்.

''பிரார்த்திக்கின்றோம் என்கிறீர்களே, 'நாளை காலை அன்னை அறைக்குள் செல்லும்போது ஒரு கோடி இருக்க வேண்டும்' என்று பிரார்த்திக்கலாமே?''

விழித்தோம்.

''நாம் கேட்கமாட்டோம். நமக்கே தெரியும், அப்படி எல்லாம் வராதுஎன்று. நம் அளவில் எப்படி யோசிப்போம்? பிரமோஷன் வர வேண்டும், இன்கிரிமெண்ட் வரவேண்டும் அல்லது இதைவிட நல்ல வேலை கிடைக்கவேண்டும் என்றுதானே யோசிப்போம். வியாபாரியானால், நன்றாக வியாபாரம் நடந்து, அதிக வருமானம் வரவேண்டும்என்று யோசிப்பார்....''

என்ன சொல்ல வருகிறார், குழம்பினோம்.

''இதிலிருந்து என்ன தெரிகிறது? நம் மனமே, உழைப்பை அடிப்படையாகக் கொண்ட ஏதோ ஒரு பண்பு மூலம்தான் வருமானம் வரவேண்டும்என்று நம்புவது தெரியும். உழைப்புஎன்பது ஒரு பண்பு. அதற்கான சட்டங்களைத் தெரிந்து பின்பற்றும்போது அன்னை அதிகமாகப் பலிப்பார். முதல் நிலையில் எவருடைய அழைப்பையும் ஏற்கும் அன்னை, அடுத்தடுத்த நிலைகளில் அந்நிலைக்குரிய நிபந்தனைகளில் ஓர் இழை பாக்கியிருந்தாலும் பதில் சொல்லமாட்டார்.

அன்னையை அடுத்த கட்டத்தில் பெற விரும்புகிறவர்கள் ஏற்க வேண்டியது அன்னையின் பண்புகள்'' உணர்ச்சிகரமாய்ப் பேசினார்.

''நாங்கள்தான் இந்த ஐயாயிரம் சம்பளத்திற்கு 10 மணி நேரம் மாடுபோல் உழைக்கிறோமே''.....

''அது எல்லோரும் செய்வது. அன்னை பலிக்கவேண்டும் என்றால் அன்னை விரும்பும் பண்புகளுக்கான சட்டங்கள் அதில் வெளிப்பட வேண்டும்''.

''புரியவில்லையே''.

''அன்னை நீங்கள் வேண்டுவதையெல்லாம் தருவதற்காக இங்கு வரவில்லை. அவருக்கு ஒரு நோக்கம் உண்டு. பரிணாமத்தைத் துரிதப்படுத்துவது. நம்மளவில் சொல்வதானால், ஒவ்வொரு கணமும் முன்னேற்றம் பெற நாம் விரும்பினால் அது நம்மளவில் ஒரு பரிணாம வளர்ச்சிஎன்பதால் அன்னை நம்மைத் தாங்கிச் செல்வார்''.

''அதற்கும், வருமானத்திற்கும் என்ன சம்பந்தம்?'', கேட்டோம்.

''ஆமாம், நீங்களும் நானும் தெய்வத்தைக்கூட எவ்வளவு தருகிறார்என்பதை வைத்துத்தானே நெருங்குவோம். நம் சுபாவத்தை ஒட்டியே நம்மை அன்னை மாற்ற விரும்புவதால் தாயுள்ளத்துடன் அந்தக் கயமையைப் பொருட்படுத்தாமல் அபரிமிதமாகப் பலிக்கிறார்''.

''ஏற்றுக்கொண்ட பண்புகளுக்கான சட்டங்களைத் தெரிந்து – உதாரணமாக, அதிர்ஷ்டத்திற்கு அடிப்படை உழைப்பு. உழைப்பு சம்பளத்திற்காக அல்லாமல் வேலைக்காகச் செய்யவேண்டும். கடமையை விரும்பிச் செய்து, உரிமையை நிலைநாட்டித் திருப்திபட வேண்டும். தினம் தினம் உழைப்புக்கான திறமையை அதிகப்படுத்த வேண்டும். திறமையை, அறிவை அதிகப்படுத்துவது பரிணாம வளர்ச்சி. அதுவே அன்னை விரும்புவது. அதைச் செய்து பாருங்கள், அதைச் செய்யுங்கள், அடுத்த மாதம் என்ன வருமானம்என்று சொல்லுங்கள்'', சிரித்தபடியே விடை கொடுத்தார்.

புரிவது போல இருந்தது. நியாயம்தானே. இந்த சூபர்வைசர் வேலைக்கு இதுவே அதிகம். அதிகபட்சம் ஆறாயிரம் கிடைக்கலாம். இன்னும் அதிகம் கிடைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் சீனியர்



சூபர்வைசர் ஆகவேண்டும். அல்லது அதற்கு இணையாக வேறு இடத்திற்குச் செல்லவேண்டும்என்றாலும், அதற்கான திறமை, தகுதி வேண்டுமே....

ராஜனைப் பார்த்தேன். அவரும் அதையே யோசித்திருக்க வேண்டும். ''கடனே என்று செய்தோம். கடன்தான் வந்தது'' சிரித்தார். ''அரசியல் சாசனம்போல அன்னை சாசனம்போலும். அன்னை organisationல் அன்னைச் சட்டப்படி இருந்தால்தான் promotion போல இருக்கிறது''... வீட்டிற்கு நடந்தோம்.

முதற்கட்டமாக உழைப்பை விரும்பிச் செய்வது, திறமையை அதிகப்படுத்துவதுஎன்று தீர்மானித்தோம். காரணம், சுத்தம்என்ற பண்புக்கான சட்டங்களைப் பின்பற்றினால் அன்னை உடனடியாகப் பலிப்பதைப் பல முறை பார்த்திருக்கின்றோம்.

மறுநாள்.

நாங்கள் வேலை செய்வது ஒரு கெமிக்கல் கோட்டிங் கம்பெனியில். என்றும் எரிச்சல் கொடுக்கும் கெமிக்கல் நெடியும், ஸ்ப்ரேயரின் இரைச்சலும் இன்று வாசனையாகவும் இசையாகவும் தோன்றியது ஆச்சரியமாக இருந்தது. இன்று ஒரு தவறும் வாராமல் அத்தனை பீஸ்களையும் தரமாகச் செய்யவேண்டும்என்று தீர்மானித்து வேலையில் இறங்கினோம்.

பதினொரு மணி. டீ நேரம். ராஜன் ஓடிவந்தார். கண்ணில் நீர். ஒரு கவரை நீட்டினார். படபடப்புடன் பிரித்துப் படிக்க என்னை அறியாமல் நெகிழ ஆரம்பித்தேன். எங்கள் தலைமை அலுவலகத்திலிருந்து எங்கள் இருவருக்கும் "Special Training Programme on Advanced Coating Systems" என்ற கோர்ஸில் கம்பனிச் செலவில் சேர்ந்துகொள்ளச் சொல்லி அனுப்பியிருந்தது. தொண்டை அடைத்தது.

என்ன தவம் செய்தோம் அன்னையே உங்களைப் பெற! ஒவ்வொரு க்ஷணமும் அருகிலேயே இருந்து, மனமாற்றத்தை எதிர்பார்த்து..... மாறக்கூட இல்லை.... மாற வேண்டும்என்று நினைத்தவுடன் அதற்கான சூழலைக் கொண்டுவரும் உங்கள் கருணை..... மேலும் நினைக்கக்கூட முடியவில்லை. என்றோ படித்தது

ஞாபகம் வந்தது, ''நான் எளியவன். என்னை மாற்றிக்கொள்ளும் அறிவு, திறன் எனக்கில்லை. நீங்களே அதையும் செய்ய வேண்டும்.... என்பதெல்லாம் மாற்றிக்கொள்ளும் முடிவு இல்லாதவர் சொல்லும் சொல். மாறவேண்டும்என்ற முடிவுக்கு வந்தவர்க்கு, அதற்கான திறமை, அறிவை நான் அளிப்பேன்'' என்றது புரிந்தது.

ராஜன் தன்னை இழந்திருந்தார். தோளில் தட்டினேன். ''இனி வேலைக்காக அன்று, அன்னைக்காகச் செய்வோம்'' என்றபடியே எழுந்து அன்றே கோர்ஸில் சேர்ந்தோம். இரண்டு மாத கோர்ஸ் முடிந்து, கற்றுக்கொண்ட அத்தனைத் திறமைகளையும் முழுதும் வேலையில் வெளிப்படுத்த ஆரம்பித்தோம்.

ஒரு நாள்.

பின்னால் கைதட்டல் கேட்க, திரும்பிப் பார்த்தோம். மொத்த ஊழியர்களும் நிற்க, பொக்கேயுடன் பிருந்தா, எங்கள் ஆபீஸ் ரிசப்ஷனிஸ்ட். பிருந்தா என்றாலே சந்தோஷம்தான். பாராட்டும், நல்ல செய்திகளையும் மட்டுமே அவரால் பேச முடியும். சின்ன செயலையும் பெரிதாய்ப் பாராட்டி, சம்பந்தப்பட்டவர் ஏதோ பெரிதாய்ச் சாதித்துவிட்டது போன்ற உணர்வை ஊட்டி, ஊக்கப்படுத்துவதில் வல்லவர். இனிப்புகளுடன் ஒரு கவரைக் கொடுத்தார்.

Supervisor-Technical Applications என்று இரு புது பதவிகள் உருவாக்கப்பட்டு, எங்களுக்கு அளிக்கப்பட்டு இருப்பதாகவும், சம்பளம் இரு மடங்காக்கப்பட்டிருப்பதையும் பார்த்து திக்குமுக்காடினோம். இதுதான் பண்புகள் மூலம் பலிப்பது என்பதா! அது இவ்வளவு எளிதானதா! இதைத்தான் புரியவில்லைஎன்று சால்ஜாப்பு செய்துகொண்டு இருந்தோமோ! நினைக்கவே வெட்கமாக இருந்தது.

கிருஷ்ணன் வீட்டிற்கு ஓடினோம்.

''என்ன வருமானம் டபுளாகிவிட்டதா?'' வரவேற்றார்.

''எப்படித் தெரியும்?'' ஆச்சரியத்துடன் கேட்டோம்.

''ஜோசியம் தெரியும்'' சிரித்தார். ''அன்னைச்சட்டம் பலிக்கும் விதம் அது. அன்னைச்சட்டங்களே அன்னை. அன்னை விரும்பும் பண்புகளே அன்னை. சரி, அனுபவம் நம்பிக்கையாகிறதா?.....''



''நிச்சயமாக, இனி அன்னையைத் தவிர வேறொன்றுமில்லை என்றிருக்கிறது'', ஒரே குரலில் சொன்னோம்.

''அப்படியென்றால் இனி நம்பிக்கை அனுபவங்கள் ஆக வேண்டும். இதை நீங்கள் 10 மடங்கு, 100 மடங்கு உயர்த்த முடியும்.... மற்றும் சில பண்புகளைச் சேர்த்துக்கொண்டால்.....''

''எப்படி?'' கண்கள் விரியப் பார்த்தோம்.

''சுத்தம், ஒழுங்கு, பொய் கூறாமை, தணிவானகுரல், சுமுகம், நிதானம்என்று பல உண்டு. அன்னை மிகவும் விரும்புவது 'அகமே புறம்' என்பதைத்தான். புறத்தில் வருபவற்றையெல்லாம் அகத்தின் வெளிப்பாடுஎன்று பார்த்து, அதற்கு ஏற்ப உள்ளே மாற்றிக் கொண்டால், அதன்மூலம் அன்னை விரும்பும் பண்புகள் வெளிப்பட்டால், வெறும்வருமானம் அல்ல, வெகு உயரத்திற்குச் சென்றுவிடலாம். அவர் இருக்கும் துறை அல்லது கம்பனிக்குத் தலைவராகலாம்.

எதை அதிகப்படுத்தவும் இதைச் செய்யலாம். வீடு, அலுவலகத்தில் சந்தோஷத்தை அதிகப்படுத்த வேண்டும்என்றால் அடிப்படைப் பண்பான சுமுகத்தை எடுத்துக்கொண்டு, அதற்கான சட்டங்களான விட்டுக்கொடுத்தல், other man's point of view, நிதானம் போன்றவற்றை பின்பற்றினால் சுமுகம்என்ற பண்புமூலம் சந்தோஷம் பலிக்கும்'', தத்துவமாக கிருஷ்ணன் பேச, புரியாமல் தலையாட்டிவிட்டு வந்தோம்.

''உங்களுக்கு ஏதாவது புரிந்ததா, ராஜன்''.

''ம்.... நம்மைச்சுற்றி இருப்பவை, நடப்பவை, வருபவை அனைத்தும் நம் உள்ளே இருப்பவைதாம். நாம் முதலில் 'கெட்டது' என்பது பற்றி யோசிக்க வேண்டாம். 'நல்லவற்றை' யோசிப்போம். அவை உள்ளே இல்லாமல் நம் எதிரில் வாராது இல்லையா? அதை அதிகமாக வெளிப்படுத்த முயல்வோம்'' என்றார் ராஜன்.

எனக்கும் அது எளிதாகப்பட்டது. ''ஏன் இன்றே பார்ப்போமே.... காலையிலிருந்து யார், யார் நம்மை நாடி வந்தார்கள்.... சர்க்கரை,

பிருந்தா, முரளி, மூர்த்தி.... அப்படியென்றால், திறமை இருப்பதாகத் தெரிந்தால் அபரிமிதமாகப் பாராட்டித் தெரியப்படுத்த வேண்டியவர்களுக்கெல்லாம் தெரியப்படுத்தும் பரந்த மனமும், பெயருக்கேற்ற இனிமையும் நமக்குள்ளும் உண்டுஎன்றாகிறது அல்லவா? அதை வெளிப்படுத்தலாமே''...

''அட, சுலபமாக இருக்கிறதே....''

''அதேபோல பக்தியானாலும், சந்தோஷமானாலும் உளமாற வெளிப்படுத்தும் பிருந்தா நம்முள் இல்லையா.... ஒரு நிமிடமும் தவறாத planning, punctuality உள்ள முரளி நம்முள் இருப்பாரே..... ஒரு கோடு போட்டாலும் பல முறை சரிபார்க்கும் perfectionist மூர்த்தியும் உள்ளே உண்டுதானே''.... உணர்ச்சிபூர்வமாகப் பேசிக்கொண்டே போனார் ராஜன்.

''நம்முள் இருக்கும் சர்க்கரை, பிருந்தா, முரளி, மூர்த்தியை வெளிக்கொண்டு வந்தாலே போதுமே.... அன்னை விரும்பும் broad mind, joy, organisation, punctuality, perfection என்று எவ்வளவு பண்புகளை வெளிப்படுத்த முடிகிறது.... திரு உருமாற்றம் என்பது புரிவதுபோல இருந்தது.

''முதலில் ஒரு படி உயரும்போதும் அந்த அந்த நிலைக்கான பண்புகளை வெளிப்படுத்தினாலே போதும்என்று நினைக்கிறேன்'' என்றார் ராஜன்.

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''நாம் வெறும் சூபர்வைசர்களாகவோ, சேல்ஸ் ரெப்பாகவோ இருக்கும்போது நம் சக அல்லது கீழ் வேலை செய்யும் ஊழியர்களுடன் தெருமுனையில் தம், டீ அடிப்பது உண்டு. அதுவே இன்று டெக்னீஷியனாக, மானேஜராக இருக்கும்போது அதுபோன்று நிற்க மனம் வரவில்லை. பண்பு, நட்புஎன்று நின்றாலும் மனம் உறுத்தும். அதற்குக் காரணம் நாம் இன்று வந்த நிலைக்குத் தேவையான பண்புகளை அங்கு வெளிப்படுத்த முடியாததால் அந்த conflict உறுத்தல் ஏற்படுகிறது. லேபராக நாம் இருந்தபோது இருந்த நடை, உடை, பாவனை, பேச்சு இன்று நகைப்புக்கு இடமளிக்கும். காரணம், மானேஜருக்கான பண்புகளை நாம் வெளிப்படுத்த வேண்டும். அது



போல கோடீஸ்வரராக வேண்டுமென்றால் அவருக்கு இருக்க வேண்டும்என்று நாம் எதிர்பார்க்கும் பண்புகள் இன்று நமக்கு வர வேண்டும். அதுபோல எதிரே வருபவர் பண்புகளை வெளிப்படுத்தினால் அவராகலாம். அன்னையின் அத்தனைப் பண்புகளையும் வெளிப்படுத்தினால் அன்னையாகலாம்''.

பெரிய தத்துவம் எளிதாகப் புரிவதுபோல இருந்தது.

மறுநாள்.....

பெயிண்ட் ஷாப்பில் பாரிஎன்னும் தொழிலாளி சிரத்தையாக ஸ்பிரே செய்துகொண்டிருக்க, என்னுள் இருந்த சர்க்கரை எழுந்தார்.... ''பாரி....'' கூப்பிட்டேன். ''பின்னாலேயே வா'', விறுவிறுவென்று பர்சனல் மானேஜர் ரூமுக்குள் சென்றேன். ''சார், இவன் சின்சியர் தொழிலாளி. பாராட்டும், இன்கிரிமென்ட்டும் இவனை ஊக்கப்படுத்தும். இந்த வாரம் நடக்கும் மீட்டிங்கில் இவரைப் பாராட்ட அனுமதிக்க வேண்டும்''.... ஆச்சரியத்துடன் பார்த்தார். 'சரி' என்று தலையசைத்தார். பாரி கண்களில் தெரிந்த நன்றி சர்க்கரையை வாழ்த்தியது.

சிரித்துக்கொண்டே வந்தபோது, ராஜன் கேட்டார், ''என்ன வாயெல்லாம் பல்லாக வருகின்றீர்கள்?''....

''சந்தோஷமாக இருக்கிறதா?''

''நிச்சயமாக''....

''அப்பாடா, பிருந்தா வெளிப்பட்டுவிட்டார். இப்படியே punctuality, planning, organisation, perfection என்று வெளிப்பட, அவை அனைத்தும் ஒருவித harmonyஐக் கொண்டுவர கம்பெனி அபரிமிதமாக வளர ஆரம்பித்தது. அன்னையின் ஒரு பண்பும், வேறு பல பண்புகளை உள்ளே இழுத்து வருவதை உணர முடிந்தது. அதிர்ஷ்டத்திற்கு அஸ்திவாரம் அன்னை விரும்பும் பண்புகள். சுபிட்சத்தின் சாசனம் அன்னைச்சட்டங்கள்.

சாதாரண spare partsகளுக்குக் கோட்டிங் என்ற நிலையிலிருந்து செயற்கைக் கோளுக்கான கோட்டிங்என்ற நிலைக்கு வளர்ந்து, அதற்கான இன்டர்நேஷனல் கான்பரன்ஸுக்குத்தான் மும்பாய் வந்திருந்தோம்.

✡✡✡✡

ராஜன் உலுக்கினார். நிகழ்காலத்திற்கு வந்தேன். கண்களில் கண்ணீர் வழிந்திருந்தது. நெகிழ்ச்சியுடன் கேட்டேன், ''ஏன் ராஜன், யார் யார் பண்புகளையோ வெளிப்படுத்துகிறோமே, அன்னையின் பண்புகளை வெளிப்படுத்த முடியாதா..... அன்னை நம்முள் இல்லையா.....''

இந்தக் கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லை. திடுக்கிட்டார். ''அதுவெல்லாம் பெரிய விஷயம்.....''

''நாம் குழந்தைஎன்ற அளவில் இருந்தபோது ஆன்மா வெளியில் இருந்தது அல்லவா...... அப்போது அன்னையின் பண்புகள் எனப்படுவது அதில் இருந்தது அல்லவா.....''

''ஆமாம், அப்படித்தான் படித்தேன்....''

''இப்போது நீங்கள் வெள்ளைபேண்ட், வெள்ளைச் சட்டை போட்டு இருக்கின்றீர்கள். அதில் அழுக்குப் படிந்தால் என்ன செய்வீர்கள்?''

''துவைத்து அழுக்கைப் போக்குவேன்''.

''ஏன்?''

''மீண்டும் வெள்ளையாக்கத்தான். என்ன கேள்வி இது?''

''அதுவேதான் நான் கூறுவதும். வெள்ளை பாண்ட், வெள்ளைச் சட்டை வெள்ளையாக இருக்க வேண்டியது அதன் இயல்பு. அதில் மாற்றம் ஏற்பட்டால், நீக்கி, மீண்டும் இயல்புக்குக் கொண்டு வருகிறோம். அதுபோல ஒரு குழந்தைஎன்ற சொல்லுக்கான இயல்புகள் நமக்குத் தெரியும். அல்லது ஆன்மாவின் இயல்புகள், அன்னை, பகவான், நம் குரு வாயிலாகத் தெரியும். அதன் மீது படிந்துவிட்ட அழுக்கு எது என்றும் தெரியும். ஒவ்வொன்றாகக் களைந்து, துவைத்து எடுப்பதுதான் நம் வேலைஎன்று நினைக்கிறேன்'', மூச்சுவாங்கப் பேசினேன்.

சந்தோஷமாகச் சிரித்தார் ராஜன். ''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் 100 பேர், 12 பேர் என்பதெல்லாம்கூட எளிதுபோல இருக்கிறதே....''

''நிச்சயமாக! தேவையானது அன்னைக்குரியவனாக வேண்டும்



என்ற மனமாற்றமும், அதற்கான உண்மையான முயற்சியும்தான். விரலை நீட்ட வேண்டியதுதான் நம் வேலை. அன்னையே, பற்றி அழைத்துச் செல்வார்''.

''ஆம், பற்றிக்கொள்ளத்தானே விரல்கள்''.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உயர்ந்த உதவியை வலிய அடுத்தவருக்கு அளிக்க முன்வந்தால் பெரும்பாலும் அவர்கள் அதை அலட்சியப்படுத்துவதைப் பார்க்கலாம். இதுவரை என் அனுபவத்தில் அதுபோல் அலட்சியப்படுத்தாதவரைப் பார்த்ததில்லை. ஒரு சிலர் அதற்காக நம்மைக் குறைகூறி அவமானப்படுத்தவும் முயல்வார்கள்.

***உயர்ந்த உதவி வலிய போனால் உயர்வை இழக்கும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூக வாழ்வில் ஒருவருடைய அகந்தை, பரோபகாரமாக வெளிப்பட்டால், அது அடுத்தவரின் அகந்தையுடன் மோதி மேற்சொன்ன பலனைக் கொடுக்கும். பரோபகாரத்தின் மூலம் அகந்தை வெளிவந்தால், அகந்தைக்குரிய பலன்தான் கிடைக்குமே தவிர பரோபகாரத்திற்குரிய பலன் கிடைக்காது.

***உதவியுடன் அகந்தை கலந்தால், பலன் அகந்தைக்கு வரும்.***

# வாழ்க்கையை மேம்படுத்த Life Divine கருத்துகள் பயன்படுமிடங்கள்

**N. அசோகன்**

பகவான் இப்புத்தகத்திற்கு The Life Divine என்று பெயரிட்டுள்ளார். Divine Soul அல்லது Divine Mind என்று பெயரிட்டிருந்தால் பொருத்தமாகவிருந்திருக்கும். பூரணயோகத்தில் மனிதனை பகவான் "Soul in the mind", அதாவது மனதில் உறையும் ஆன்மாஎன வர்ணித்து உள்ளார். அதனால் Divine Soul என்று பெயரிட்டிருந்தால் பொருத்தமாகவிருந்திருக்கும். பூரணயோகத்தின் லட்சியமே Supermind என்ற சத்தியஜீவியத்தை நோக்கிப் பயணம் செய்வதுதான். ஆகவே Divine Mind என்று பெயரிட்டிருந்தாலும் பொருத்தமாகவே இருந்திருக்கும். ஆனால் அவர் Life Divine என்று பெயரிட்டுள்ளார். Divine Matter என்றுகூட பெயரிடவில்லை. இதை வைத்துப் பார்க்கும் பொழுது வாழ்க்கையை தெய்வீகமயமாக்க முடியும், அதற்கு இப்புத்தகத்தில் உள்ள கருத்துகள் உதவும் என்று தெரிகிறது.

புத்தகத்திலுள்ள 56 படலங்களும் 56 கருத்துகளைச் சொல்கின்றன. புத்தகத்தின் அடிப்படைக் கருத்து முதல் படலம் துவங்குவதற்கு முன்னரே Fly leaf என்று சொல்லப்படும் = inside First pageஇல் "Omnipresent Reality & The Universe" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது பரம்பொருளும் பிரபஞ்சமும்என்று அர்த்தமாகும். இரண்டாம் பாகத்திற்கு முன்னால் The Knowledge and the Ignorance – The Spiritual Evolution என்று பெயரிட்டுள்ளார். இந்த இரண்டாம் புத்தகத்தை மேலும் இரண்டு பாகங்களாகப் பிரித்து, முதல் பாகத்திற்கு The Infinite Consciousness and the Ignorance, அதாவது அனந்த ஜீவியம் மற்றும் அஞ்ஞானம்எனவும், இரண்டாம் பாகத்திற்கு The Knowledge and the Spiritual Evolution ஞானமும் பரிணாமமும் என்று பெயரிட்டுள்ளார். 56 அத்தியாயங்களும், 1450 பாராக்களாகப்



பிரிகின்றன. ஒவ்வொரு பாராவும் ஒரு கருத்தைக் கூறுகின்றது. ஒவ்வொரு படலத்திலும் ஒரு புதிய கருத்தைக் கூறுவதே கடினம். ஆனால் பகவான் ஒவ்வொரு பாராவிலும் ஒரு புதிய கருத்தைக் கூறியுள்ளதாக கர்மயோகி அவர்கள் கூறுகின்றார். இது பகவானுடைய சிந்தனையிலுள்ள originalityஐக் காட்டுகிறது. நூலின் அடிப்படைக் கருத்து பெரியது என்றாலும் ஒவ்வொரு தனிப் பாராவிலும் உள்ள கருத்து சிறியதாகவே இருக்கும். ஆகவே அவற்றை விளக்குவதோ, நடைமுறையில் பயன்படுத்துவதோ எளிதாக இருக்கும். நூலில் உள்ள சில கருத்துகளை இப்பொழுது குறிப்பிட்டு, அவற்றை விளக்க முயல்கிறேன்.

1. பகவான் முரண்பாடுகளை உடன்பாடுகள்என்று கூறுகிறார். இக்கருத்து The Human Aspiration என்ற முதல் படலத்திலேயே வருகிறது. இறைவனின் செயல்பாடும் இயற்கையின் செயல்பாடும் மனிதனுடைய அறிவைத் தாண்டியவைஎன்பதை அழகாக விளக்கும் கருத்து இது. மனிதனுக்கு முரண்பாடாகத் தெரிவது இயற்கைக்கும் இறைவனுக்கும் உடன்பாடுகளாகத் தெரிகின்றனஎன்றால், அதெப்படிஎன்று மனிதன் ஆச்சரியப்படுகின்றான். மனித வாழ்க்கையிலேயே இத்தகைய முரண்பாடுகள் உடன்பாடுகளாக இயங்கிக்கொண்டிருக்கின்றனஎன்பதை விளக்கிக் கூறினால்தான் இக்கருத்து விவரமாக புரியும். சற்று நேரத்தில் இக்கருத்தை விவரமாக விளக்குகிறேன்.
2. Divine Maya என்ற 13ஆம் படலத்தில் பெரியது சிறியதாகிறது. சிறியதற்கு ஒரு இலட்சியம் என்றிருந்தால் அது மீண்டும் பெரியதாவது என்றே இருக்கும் என்றொரு கருத்தைக் கூறுகின்றார். பெரியதுஎன்பது infinite என்பதையும், சிறியதுஎன்பது finiteஐயும் குறிக்கின்றது. சிறியது என்பது எப்படி மீண்டும் பெரியதாக முடியும். Finite and infinite என்ற கருத்துகளை மனித வாழ்க்கையில் நாமெப்படி பொருத்திப் பார்ப்பது என்பதையும் விவரமாகப் பார்ப்போம்.
3. பிரம்மா, புருஷா, ஈஸ்வராஎன்ற படலத்தில் பிரம்மத்தின் பூரணத்தை நாம் அறியும் சொல்லால் கூற முடியாது. வேதம் எழுதப்பட்ட கனத்த மொழியில் சொல்லலாம்என்கிறார். நம் மனநிலையும், பேச்சும் எப்படி

மாறினால் நம்மாலும் பிரம்மத்தைப் புரிந்துகொள்ள முடியும்என்பதைப் பார்க்க வேண்டும்.

4. சத்புருஷன் (The Pure Existent) என்ற படலத்தில் சிவனுக்கும் காளிக்கும் உள்ள தொடர்பென்னஎன்று நாமறிய வேண்டும்என்கிறார். அதாவது Static Brahman and Dynamic Brahman ஆகிய இரண்டிற்கும் உள்ள தொடர்பைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார்.

5. மாயை என்ற படலத்தில் பிரபஞ்ச மாயை வேறு சங்கரர் கூறும் உலக மாயை வேறு என்கிறார். வித்தியாசம் என்னஎன்று பார்க்க வேண்டும்.

Life Divineஇல் உள்ள கருத்துகளை வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் பயன்படுத்திக்கொள்ளலாம்என்று சொன்னேன். இங்கே நாம் சற்று யோசிக்க வேண்டும். Life Divineஇல் பல புதிய கருத்துகள் உள்ளன என்று தெரியும்பொழுது அவற்றைக் கடைப்பிடித்து ஒரு நல்ல பலனைப் பார்க்க வேண்டுமென்ற ஓர் ஆர்வம் எழுகிறது. இந்த ஆர்வம் தற்காலிகமானதா அல்லது நம்மை seriousஆகச் செயல்பட வைக்குமாஎன்று பார்க்க வேண்டும். அன்னை ஸ்ரீ அரவிந்தரிடம் வருவதற்கு முன்பே பல ஆக்கபூர்வமான கருத்துகளையும் ideaக்களையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவற்றையெல்லாம் கடைப்பிடித்தோமா, என்ன பலன்களைப் பார்த்துள்ளோம்என்பதைக் கருத வேண்டும். ஏற்கனவே பல நல்ல புதிய கருத்துகளைக் கடைப்பிடித்து நல்ல பலன்களைக் கண்டுள்ளோம் என்றால், Life Divine கருத்துகளையும் பயன்படுத்தி நல்ல பலனைப் பார்க்க முடியும்என்று நம்பலாம். ஏற்கனவே தெரிந்ததையே கடைப்பிடிக்கவில்லை என்றால், Life Divine கருத்துகளாலும் பயனில்லை என்றாகிவிடும்.

வாழ்க்கையில் சில பொதுப்படையான நல்ல கருத்துகளும் பண்புகளும் உள்ளன. உண்மை பேசுதல், சுத்தம், சுறுசுறுப்பு, காலம் தவறாமை, கடமையுணர்வு, self-giving, பணிவு, சுமுகம், செய்வதைத் திருந்தச் செய்தல் போன்றவை இதற்கு உதாரணங்கள். சுறுசுறுப்பு, perfection ஆகிய கருத்துகளைப் பயன்படுத்தி எவரும் பயனடையலாம். சாதாரண மனிதன் சுறுசுறுப்பாகவும், perfectஆகவும்



இருந்தால் வாழ்க்கையில் அதற்குஎன்ன பலனுண்டோ அது கிடைக்கும். அன்னை பக்தர்கள் Life Divineஇல் பகவான் குறிப்பிடுகின்ற perfect perfectionஐ வாழ்க்கையில் வெளிப்படுத்தினால் வருகின்ற பலன் சாதாரணமாக இருக்காது. வாழ்க்கையில் கிடைப்பதைவிடப் பல மடங்கு பெரிதாக சத்தியஜீவிய சக்தி கொடுக்கின்ற பிரம்மாண்டமான பலனாக வரும்.

ஒரு காரில் பயணம் செய்கின்றோம் என்றால், அக்காரிலுள்ள எல்லாப் பாகங்களும் நல்ல கண்டிஷனில் இருந்து, நல்ல முறையில் இயங்கும் பொழுதுதான், பயணம் smoothஆக இருக்கும். Gear சரியில்லை, அல்லது டயர் சரியில்லை, break சரியில்லை, seat சரியில்லை, A/c சரியில்லைஎன்று ஏதேனும் ஒரு முக்கியமான பாகம் பழுதாகி இருந்தாலும் அந்த அளவிற்குப் பயணத்திலுள்ள smoothness குறைந்துவிடும். அம்மாதிரியே ஒரு வேலைஎன்று எடுத்துக்கொண்டால் அதில் பல்வேறு பாகங்களுள்ளன. எல்லா பாகங்களிலும் perfection வெளிப்படும்பொழுது அது பகவான் சொல்கின்ற perfect perfection ஆகிவிடுகிறது. அப்படிப்பட்ட perfection வெளிப்படும்பொழுது பலன் வாழ்க்கையில் நாம் சாதாரணமாகப் பார்ப்பதைவிடப் பல மடங்கு பெரிதாகவிருக்கும்.

ஒரு கம்பெனி என்று எடுத்துக்கொண்டால் அதில் பல பிரிவுகள் இருக்கும். Production, sales, raw material procurement, accounts, bank dealings, customer relations, machinery maintenance, tax payment, wages, disbursement என்று உட்பிரிவுகள் பலவிருக்கும். எல்லாக் கம்பெனிகளிலும் எல்லா உட்பிரிவுகளிலும் perfection இருக்கும்என்று சொல்ல முடியாது. Productionஇல் உள்ள perfection விற்பனையிலோ அல்லது collectionஇலோ இருக்காது. Accountsஇல் உள்ள நேர்த்தி machinery maintenanceஇலோ அல்லது இடத்தை சுத்தமாக வைத்துக்கொள்வதிலோ இருக்காது. Machinery நல்ல conditionஇல் இருந்தாலும் departmentகளுக்கு இடையில் ஒரு நல்ல co-ordination இல்லாமல் வேலை வேகமாக நடக்காது.

ஊழியர்களுக்கு நன்றாக வேலை செய்யத் தெரிந்திருந்தாலும், மார்க்கெட்டில் productற்கு நல்ல demand இருந்தாலும், தேவை இல்லாமல் management-labourக்கு இடையே தகராறு எழுந்து, அதனால் productivity மற்றும் sales பாதிக்கப்படும்.

இப்படியெல்லாம் இல்லாமல் ஓர் அன்னை பக்தர் perfect perfection என்ற Life Divine கருத்தை மனதில் கொண்டு தான் நடத்துகின்ற நிறுவனத்தின் எல்லா உட்பிரிவுகளிலும் நேர்த்தியைக் கொண்டு வந்தாரென்றால் அந்நிறுவனம் அது இயங்குகின்ற துறையில் முதன்மை நிலைக்குக் கண்டிப்பாக வந்துவிடும். வாழ்க்கையில் இப்படி எல்லா இடங்களிலும் perfectionஐக் கொண்டு வந்துள்ள நிறுவனங்களையோ அல்லது ஸ்தாபனங்களையோ பார்ப்பது அரிது. இன்று சிறப்பாகச் செயல்படும் ஸ்தாபனங்கள் எல்லாம் ஏதோவோர் அம்சத்தைச் சிறப்பாக வளர்த்துக்கொண்டு அதன் மூலம் பிரபலம் அடைந்தவைதான். Coca-Cola product qualityக்கு பெயர்போனது. சரவணபவன் ஓட்டல்கள் சுத்தத்திற்குப் பெயர்போனவை. Reliance முதலீட்டிற்குப் பெயர்போனது. இப்படிப் பகுதியின் சிறப்பிற்கே இவ்வளவு பலன் கிடைத்தால் முழுமையின் சிறப்பிற்கு எவ்வளவு பெரிய பலன் கிடைக்கும்என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

முரண்பாடுகளாக நமக்குத் தெரிபவை இறைவனுக்கும் இயற்கைக்கும் உடன்பாடுகள்என்ற முதற்கருத்தை நாம் இப்பொழுது விவரமாக பார்ப்போம். மனிதனுடைய அறிவிற்கு முழுமையான பார்வை கிடையாதுஎன்பதால் ஒரு பகுதியைப் பார்க்கும்பொழுது மற்றொரு பகுதியை அது விட்டுவிடுகிறது. மேலும் எல்லாவற்றையும் பிரித்து எதிர்மறைகளாகவே பார்க்க நம்மறிவு பழகிவிட்டதால் எதிர்மறைகளாகத் தெரியும் இரண்டு பகுதிகள் உடன்படும் இரு பகுதிகளாக இணைந்து ஒரு முழுமையைக் கொண்டு வரும் என்பதையே நம்மறிவு ஏற்க மறுக்கிறது.

இன்பம்-துன்பம், நல்லது-கெட்டது, பிறப்பு-இறப்பு, வரவு-செலவு, வெற்றி-தோல்வி, இவையெல்லாம் நம்மறிவிற்கு எதிர்மறைகளாகும்.



மேலோட்டமாக எதிர்மறைகளாகத் தெரிந்தாலும், சற்று ஆழமாகப் பார்த்தால் இவை உடன்பாடுகளாகச் செயல்படுவதைப் பார்க்கலாம். இன்பத்தை நாம் நாடுகிறோம், துன்பத்தை விலக்குகிறோம். ஆனால் பகவானுடைய கருத்தின்படி பார்த்தால் நம்மான்மாவிற்கு இரண்டுமே அனுபவங்கள்தாம். இரண்டையும் அது சமமாகவே வரவேற்கிறது என்கிறார். இன்பகரமான அனுபவமாகவிருந்தாலும் சரி, துன்பமயமான அனுபவமாகவிருந்தாலும் சரி, இரண்டின் மூலமும் ஆன்மாவிற்கு ஆனந்தம்தான் கிடைக்கிறது. நாம் அகந்தையின் பிடியில் சிக்கியிருப்பதால் இந்தப் பொதுப்படையான ஆனந்தம் நம் கண்ணிற்குத் தெரிவதில்லை. நம் வாழ்வு மேலோட்டமாக இருப்பதால் இன்பம், துன்பம்என்ற எதிர்மறைகளில் நாம் மூழ்கியிருக்கிறோம். அவற்றிலிருந்து விடுபட முடிவதில்லை.

வெற்றி வேண்டும், தோல்வி வேண்டாமென்கிறோம். தோல்வி என்பது உண்மையில் தோல்வி இல்லை. அது, வாழ்க்கை நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடமாகும். தொழிலில் வருகின்ற நஷ்டத்தை நாம் வெறும்நஷ்டமாகப் பார்க்கக்கூடாது. அதை, புத்தி கொள்முதலாக எடுத்துக்கொள்ள வேண்டும். நஷ்டம்என்பது நாம் செய்கின்ற தவறுகளால் வருவது. தவறுகளை நாம் படிப்பினையாக ஏற்றுக் கொண்டால், அவையெல்லாம் புத்தி கொள்முதலாகிறது. இப்படி தோல்விஎன்ற அனுபவத்தின் காரணமாக நம்மறிவு வளர்வதால், பின்னால் நம்மால் மேலும் பெரிதாக வெற்றியைத் தேடிக்கொள்ள முடிகிறது. இக்கண்ணோட்டத்தில் பார்த்தால், தோல்வி புத்தி கொள்முதலாக மாறி, பெருவெற்றிக்கு வழிசெய்கிறதுஎன்பது புரியும் பொழுது வெற்றியும், தோல்வியும் எப்படி உடன்பாடுகளாக செயல்படுகின்றனஎன்பது நமக்குப் புரிகிறது.

பகலும், இரவும் நமக்கு எதிர்மறைகளாகத் தெரிகின்றன. ஆனால் அவையிரண்டும் சேர்ந்ததுதான் ஒரு நாள். பகலில் செய்கின்ற வேலையினால் வரும் களைப்பிலிருந்து மீள்வதற்காக நாம் இரவில் உறங்கி எழுகிறோம். நமக்குப் பகல் மட்டும்தான் வேண்டும், இரவு வேண்டாம் என்றால், 24 மணி நேரமும் நம்மால்

வேலை செய்து கொண்டிருக்க முடியுமா? நெடுநாள் நம்முடம்புதான் தாங்குமா? நம் உடம்பிற்கு ஓய்வு தேவைஎன்பதை இயற்கையே புரிந்துகொண்டு பகலும், இரவும் மாறி மாறி வரும்படி அமைந்துள்ளது.

நம் உடம்பும், உயிரும், இரண்டுமே எதிர்மறையான விஷயங்கள்தாம். உடம்பிற்கு வடிவமுண்டு, ஆனால் உயிருக்கு வடிவமே இல்லை. ஆனால் இவ்விரண்டும் சேர்ந்து செயல்படும் பொழுதுதான் உயிருள்ள உடம்பு கிடைக்கிறது. உயிரில்லாத உடம்பிற்கு நடமாட்டம் கிடையாது. உடம்போடு இணையாமலிருந்தால் உயிருக்கு வெளிப்பாடு கிடையாது.

வாழ்க்கையின் அடிப்படையிலேயே இப்படியொரு முரண்பாடு உடன்பாடாக மாறிச் செயல்படுகின்றதென்றால், வாழ்க்கைக்குள் மேலும் எத்தனை முரண்பாடுகள் உடன்பாடுகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனஎன்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடு, வரவு மற்றும் செலவு, பழையது மற்றும் புதியது, Unity and diversity, இயக்கம் மற்றும் ஓய்வு, stability and change, வாய்ப்பு மற்றும் பிரச்சினை, என்றிவையெல்லாமே முரண்பாடான விஷயங்கள் உடன்பாடுகளாக இயங்குவதுதான்.

கட்டுப்பாடுகளே இல்லாமல் ஒருவருக்கு வாழ்க்கையில் முழுச் சுதந்திரம் கிடைத்தால் அவர் செய்யக்கூடாத தவறுகளை எல்லாம் செய்து தம் வாழ்க்கையைச் சீரழித்துக்கொள்ள வாய்ப்புள்ளது. அதே சமயத்தில் சுதந்திரமே இல்லாமல் வாழ்க்கை முழுக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால், முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சுதந்திரம்கூட இல்லாமல் போய்விடும். பெற்றோர்கள் செல்லம் கொடுத்து சுதந்திரமாக வளர்த்ததால், கட்டுப்பாடுகளே இல்லாத நிலையில் தவறான பாதையில் சென்று வாழ்க்கையை சீரழித்துக்கொண்ட இளைஞர்களைப் பார்க்கின்றோம். வேலை செய்யுமிடத்தில் சுதந்திரமே இல்லை, அதனால் முன்னேற வாய்ப்பே இல்லைஎன்று பணிபுரியும் இடத்திலிருந்து ஊழியர்கள் வெளி-யேறுவதையும் பார்க்கின்றோம். ஆகவே சீராகவும் முன்னேற்றப் பாதையிலும் போக வேண்டுமென்றால் சுதந்திரமும், கட்டுப்பாடும்



வாழ்க்கையில் ஒரு proper proportionஇல் இணைந்திருந்தால்தான் முடியும்என்றாகிறது.

இதே ரீதியில் பார்த்தால் வரவும், செலவும் எதிர்மறைகளாகும். பணம் வருகிறதென்றால் நமக்கு சந்தோஷமாக உள்ளது. அதே சமயத்தில் செலவு என்றொன்று வந்தால், நாம் அவ்வளவு சந்தோஷப்படுவதில்லை. ஆனால் உண்மையில் பார்த்தால் நாம் சம்பாதிப்பதே செலவு செய்வதற்காகத்தான். செலவுஎன்று ஒன்றில்லை என்றால் சம்பாதிப்பதில் அர்த்தமே இல்லை. மேலும் செலவு செய்தால்தான் நம்மால் சம்பாதிக்கவே முடியும். ஒரு தொழில் செய்து சம்பாதிக்க விரும்பினால் மூலதனம் என்றொரு செலவைச் சந்தித்தே ஆகவேண்டும். அடுத்தவரிடம் சம்பளத்திற்கு வேலை செய்தாலும், நம்முடைய உழைப்பையும், நேரத்தையும் செலவு செய்தால்தான் நாம் செய்த வேலைக்குரிய சம்பளமே கிடைக்கும். இதை வைத்துப் பார்க்கும்பொழுது வருமானத்தை உயர்த்திக்கொள்ள விரும்பு-கின்றவர்கள் செலவையும் அதற்கு நிகராக உயர்த்தவேண்டும் என்றாகிறது.

இறைவனை நாம் சச்சிதானந்தமாகப் பார்க்கும்பொழுது இறைவனை சத்தியமாகவும், ஒளியாகவும், ஆனந்தமாகவும் பார்க்கிறோம். அதே சமயத்தில் படைப்பையும், உலக வாழ்க்கையையும் பார்க்கும்பொழுது அது பொய்யிலும், இருட்டிலும், துன்பத்திலும் மூழ்கியுள்ளதைப் பார்க்கிறோம். சச்சிதானந்தம் பிரம்மத்தின் ஒரு வெளிப்பாடென்றால், படைப்பும் உலகமும் பிரம்மத்தின் மற்றொரு வெளிப்பாடு. இரண்டும் சேரும்பொழுதுதான் பிரம்மம் முழுமை அடைகிறதுஎன்றால் நம்மறிவு அதை ஏற்க மறுக்கிறது. இரண்டுமே மிகவும் முரண்பாடாகத் தெரிவதால், இரண்டும் ஒரே முழுமையின் இரு வேறு பிரிவுகள்என்பது நம்மறிவிற்கு ஏற்புடையதாக இல்லை.

ஆனால் உண்மை என்ன? இன்று சச்சிதானந்தமும், படைப்பும் மிகவும் முரண்பாடாகத் தெரியலாம். இந்த முரண்பாடு நிரந்தரமானது இல்லை. இதையடுத்து ஒரு பெரிய உடன்பாடுவரக் காத்திருக்கிறது.

சத்தியஜீவியம் படைப்பில் வெளிப்பட்டு, படைப்பும் சத்தியமயமாகவும், ஒளிமயமாகவும், ஆனந்தமயமாகவும் மாறும்பொழுது அந்தப் பெரிய உடன்பாடு நமக்குப் புரியும். படைப்பிற்குள் மறைந்திருக்கும் உண்மையும், ஒளியும், தெய்வீகமும் மேலிருந்து வரும் சத்திய ஜீவியத்துடன் இணைந்து மேலோட்டமாகவுள்ள முரண்பாடு-களிலிருந்து விடுபட்டு, படைப்பு முழுவதும் இறைமயமாகும் பொழுது அடிப்படையிலுள்ள உடன்பாடு புரியும். மேலோட்டமாக சச்சிதானந்தத்-திற்கும் படைப்பிற்கும் இடையே முரண்பாடு உள்ளதாகத் தெரிவதுஎன்பது படைப்பு அறியாமையில் மூழ்கியிருப்பதாலாகும். அறியாமை விலகி உள்ளிருக்கும் தெய்வீகம் வெளிவரும்பொழுது முரண்பாடு மறைகிறது, உடன்பாடு பூரணமாகிறது.

இப்பொழுது சிறியதின் இலட்சியம் பெரியதாவதுஎன்ற கருத்தைப் பார்ப்போம். இங்கே சிறியதுஎன்பது finiteஐயும், பெரியது என்பது infiniteஐயும் குறிக்கிறது. ஸ்ரீ அரவிந்தம் சொல்வதை வைத்துப் பார்த்தால் infiniteஆன பிரம்மம்தான் finiteஆக மாறியுள்ளது என்றாகிறது. அதாவது படைப்புஎன்ற லீலையை நிகழ்த்துவதற்காக infinite தன்னை finiteற்குள் மறைத்துக் கொண்டுள்ளதுஎன்று சொல்லலாம். இப்படி, தன்னை மறைத்துக் கொள்ளவில்லையென்றால் படைப்பே நிகழ்ந்திருக்க முடியாது என்றாகிறது.

இப்படி infiniteதான் finiteஆக மாறியிருக்கிறது என்னும் பொழுது இந்த finiteஆல் மீண்டும் பழைய infiniteஆக மாற முடியும் என்றாகிறது. தண்ணீர் ஐஸாக மாறுகிறதுஎன்றால், ஐஸால் மீண்டும் தண்ணீராகவும் மாற முடியும். இன்று நொடித்துப்போய் வறுமையில் வாடுகின்ற ஒருவனுடைய குடும்பம் அவனுடைய பாட்டனார் காலத்தில் செல்வச் செழிப்புடன் இருந்ததுஎன்றால், இன்று வறுமையில் உள்ள அந்தப் பேரனுக்குள் அவனுடைய பாட்டனாரின் செல்வம் மறைந்து இருக்கிறதுஎன்றாகிறது. அவன் விழித்துக்கொண்டு தன் பாட்டனாரைப் போல் தானும் செல்வனாகத் தலையெடுக்க வேண்டும் என்று விரும்பினால் அவனால் அப்படிச் செல்வனாக மாற முடியும்.



ஆகவே infiniteஆன பிரம்மம் தான் finiteஆன படைப்பாக மாறியுள்ளதுஎன்றால், அந்தப் படைப்பு விரும்பினால் மீண்டும் தன்னுடைய ஆதியைச் சென்றடையலாம்என்றாகிறது. சிறியதான finiteற்குள் பெரியதான infinite எப்படி மறைந்திருக்க முடியும் அல்லது பெரியது எப்படி தன்னைச் சிறியதாக்கிக் கொள்ள முடியும் என்ற கேள்விகள் நம்மறிவிற்கு எழலாம். நம்மறிவு எழுப்பும் கேள்விகள் பிரம்மத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. நம்மறிவின் logicக்கு இது ஒத்துவரவில்லைஎன்றாலும், infiniteஇன் logicக்கு இத்தகைய மாற்றம் ஒத்துவரத்தான் செய்கிறது.

பிரம்மம் மூன்று வழிகளில் இப்படைப்பை நிகழ்த்தியுள்ளதாக ஸ்ரீ அரவிந்தர் சொல்கிறார். Self-conception, Self-limitation and Self-absorption ஆகியவை இம்மூன்றுமாகும். இந்த மூன்றாம் முறையான Self-absorption என்பதுதான் தனக்குள்ளே தான் மறைந்துகொள்வதாகும். Self-limitation என்ற முறையின் மூலம் infinite முதலில் தன்னை finiteஆக்கிக் கொள்கிறது. Self-absorption என்ற முறையின் மூலம் இந்த finiteற்குள் தன்னுடைய infinite அம்சத்தை மறைத்துக்கொள்கிறது.

இப்படி finite தனக்குள் infinite மறைந்திருக்கிறது என்று உணரும் பொழுது, அதை வெளிப்படுத்த முயலும்பொழுது, infinite வெளிவரும்பட்சத்தில் இதுவரை finiteஆக இருந்தது தானும் infiniteஆகிறது. Finiteஇலிருந்து infinite வெளிவருவதற்குப் படைப்பில் நிறைய நிரூபணங்கள் உள்ளன. ஜடம், அதாவது matter என்பது finite ஆகும். ஆரம்பத்தில் படைப்பில் வெறும்ஜடம்தான் இருந்தது. ஆனால் பரிணாம வளர்ச்சியில் ஒரு கட்டத்தில் ஜடத்திலிருந்து Life வெளிவந்துள்ளது. ஜடத்தைவிட life-force பெரியதாகும். Finiteஆன ஜடத்திலிருந்து infiniteஇன் ஒரு வெளிப்பாடாக life வெளிப்பட்டது. இதோடு பரிணாமம் நிற்கவில்லை. Lifeஇலிருந்து மனிதன் என்ற ரூபத்தில் அறிவு வெளிப்பட்டுள்ளது. அறிவு lifeஐவிடப் பெரியது. இதுவும் infiniteஇன் மற்றொரு வெளிப்பாடாகும். பரிணாமம் இங்கே நிற்காமல் மேலும் தொடர்கிறது.

இப்பொழுது அறிவிலிருந்து சத்தியஜீவியமும், சைதன்யமும், அதாவது Supermindஉம் Psychic Beingஉம் வெளிப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அணுஎன்பது நம் கண்ணிற்குக்கூட புலப்படாத அளவிற்கு சிறியதொரு பொருள் ஆகும். ஆனால் அதை உடைத்தால் அவ்வளவு பிரம்மாண்டமான எனர்ஜி வெளிப்படுகிறது என்பதை வைத்துப் பார்க்கும்பொழுது, finiteற்குள் infinite மறைந்துள்ளதுஎன்பதற்கு நமக்கு வேறு நிரூபணமே தேவையில்லை. Finite, infinite ஆகலாம் என்ற கருத்து நம் மனித வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள எப்படி உதவும்என்பதை நாமிப்பொழுது பார்ப்போம்.

நமக்குள் ஏராளமாகத் திறமைகள் மறைந்துள்ளனஎன்பது ஒரு பெரிய ஆன்மீக உண்மை. ஏதோ ஒரு சில திறமைகளைத்தாம் நாம் வளர்த்துக்கொண்டுள்ளோம்என்றாலும், இவைதாம் நம் திறமைக்கு வரம்பு என்றில்லை. மேலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்தான் நாமொரு திறமையை வளர்த்துள்ளோம் என்றாலும், அதோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றில்லை. அதைத் தாண்டி எந்தவொரு திறமையையும் நாம் அளவுகடந்து வளர்த்துக்கொள்ளலாம் என்பதும் உண்மை.

பாக்கெட்டில் வெறும் 5 அல்லது 10 ரூபாயுடன் ஊரை விட்டு ஓடிவந்து cityக்கு பிழைப்புத் தேடி வந்தவர்கள் சிலர் கடினமாக உழைத்து அபாரமான திறமைகளை வளர்த்துக்கொண்டு இன்று கோடீஸ்வரர்களாக உலகில் நடமாடுவதைப் பார்க்கிறோம். ஒன்றுமே இல்லாமல் ஊரைவிட்டு ஓடி வந்தவர்களால் எப்படி காலப்போக்கில் கோடீஸ்வரர்களாக முடிந்ததுஎன்றால், அவர்களுக்குள் மறைந்து கிடந்த அளவுகடந்த திறமைகளை அவர்கள் உணர்ந்து வெளிப்படுத்தியதால்தான் இது சாத்தியமாயிற்றுஎன்றாகிறது. ஏதோ ஒரு சிலருக்குப் பலிப்பது எல்லோருக்கும் பலிக்கும் என்பதைத்தான் இப்பொழுது என் தகப்பனார் தம்முடைய கட்டுரைகள் மற்றும் புத்தகங்கள் வாயிலாக அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்.



இலட்சம்ரூபாய் மாத வருமானம் எல்லா அன்னை அன்பர்களுக்கும் சாத்தியம் என்றவர் சொல்கிறார்என்றால், அவரவருக்குள் மறைந்திருக்கும் அபாரத் திறமைகளை அன்னையின் அருளென்ற அபார பலத்தின் உதவியுடன் வெளிப்படுத்தி இந்த வருமானத்தைப் பார்க்கலாம் என்றவர் நம்புகிறார். Finite, Infiniteஆவதுஎன்ற கருத்தை அவரவருடைய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு நாம் வடிவமைத்துக் கொள்ளலாம். அவரவருக்கு எது வாழ்க்கையின் உச்சகட்டமாகப்படுகிறதோ அதுவே அவர்களுக்கு infiniteஆக அமையும். ஒரு பாக்டரித் தொழிலாளிக்கு முதலாளி ஆவதும், clerical வேலை செய்பவருக்கு ஆபீஸராவதும், ஒரு சிறு விவசாயிக்குப் பெரிய பண்ணையாராவதும், படிப்பறிவில்லாத குடும்பத்தில் பிறந்த இளைஞனுக்கு பட்டதாரியாவதும், ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்ணிற்கு வசதியான மணமகன் அமைவதும் வாழ்க்கையின் உச்சகட்டங்கள்என்றால், இவையே அவர்களுக்கு infiniteஆக அமைகிறது. அன்னையின் அருட்சக்தி infinite அம்சம் கொண்டதுஎன்பதால், அவரவர் தமக்கு எது infinite என்று நிர்ணயித்துக்கொள்கிறார்களோ, அது அவர்கள் வாழ்க்கையில் பலிக்க அன்னையின் அருள் வழி செய்கிறது.

நாம் வெளிப்படுத்தும் திறமைகளைவிட நமக்குள் மறைந்து இருக்கும் திறமைகள் ஏராளம்என்பது Development Theoryயுடைய முக்கியமானவொரு principle ஆகும். ஆகவே உள்ளிருக்கும் திறமைகள் முழுவதும் வெளிவர வேண்டுமென்றால், நம்முடைய முயற்சியும் அதற்கீடாக அளவுகடந்ததாக இருக்க வேண்டும் என்றாகிறது. அப்படி முயல்பவர்கள் வாழ்க்கையில் அந்த அளவிற்கு infinity வெளிப்படத்தான் செய்கிறது. நம் நாட்டின் பரப்பளவையும், மக்கள் தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஜப்பான் நம் நாட்டைவிடப் பரப்பளவிலும் சரி, மக்கள் தொகையிலும் சரி, பத்து மடங்கு சிறிய நாடாகும். ஆனால் அந்நாடு அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகிலேயே இரண்டாவது பணக்கார நாடாகத் தலையெடுத்திருக்கிறது. அங்கே ஒருவருடைய வருடாந்திரத் தனிநபர்

வருமானம் 35,000 டாலராகும். ஆனால் இந்தியாவில் ஒருவருடைய வருடாந்திர வருமானம் வெறும் 470 டாலர்தான்.

ஜப்பானியக் கலாச்சாரத்தில் ஆன்மீகச் சிறப்புகள் இல்லை. நிறைய உடலுழைப்பும், படிப்பும், skilled trainingஉம்தானுள்ளன. அதற்கே இவ்வளவு பெரிய பலன் வரும்பொழுது, ஆன்மீக பலங்கொண்ட நம் நாடு முன்னேற்றத்தில் முழு ஆர்வம் காட்டி, முழு முயற்சி எடுத்தால் எவ்வளவு பெரிய பலன் கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏற்றுமதி மூலம் நம் நாட்டிற்குக் கிடைக்கும் வருமானம் வருடத்திற்கு 30,000 கோடியாகும். ஆனால் சீனாவில் ஷாங்காய் என்ற ஒரு பெரிய மாநகரம் மட்டுமே இதே 30,000 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்ய முடிகிறதுஎன்று நமக்கு வியப்பாக உள்ளது. ஆனால் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் சுபிட்சத்தை உயர்த்துவதில் சீனர்கள் பேரார்வம் காட்டுவதால் ஏற்றுமதியில் அவர்களால் இப்படி ஓர் அளவுகடந்த வளர்ச்சியைக் கொண்டுவர முடிந்துள்ளது.

Finite, infiniteஆக மாற வேண்டுமென்றால் அதனுடைய வளர்ச்சிப் பாணியை infiniteற்கு ஏற்றாற்போல மாற்றிக்கொள்ள வேண்டும். Finite என்பது எடுக்க எடுக்கக் குறையும். Infinite என்பது எடுக்க எடுக்க வளரும். ஆகவே நாம் finiteஆக செயல்படும் பொழுது செலவைக் குறைத்து வெளியிலிருந்து வருமானத்தை சேகரம் செய்வதை அதிகமாக்க விரும்புகிறோம். அதாவது finite என்பது grows by taking and diminishes by giving. ஆனால் infiniteஇன் செயல்பாடு இதற்கு நேர் எதிர்மாறானது. Infinite என்பது கொடுப்பதன் மூலம் வளர்கிறது. இதற்கு நம் வாழ்க்கையிலேயே உதாரணங்கள் உள்ளன. அறிவுஎன்பது infiniteஆனவொரு விஷயம். அதை எந்த அளவிற்கு நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறோமோ அந்த அளவிற்கு அது வளரும். பணத்திற்கும் இதே அம்சம் உண்டுஎன்றால் நம்மால் அதை நம்ப முடிவதில்லை.

தொடரும்.....

❀ ❀ ❀



# கர்மவினையைக் கரைப்பதற்கான பிரார்த்தனை

N. அசோகன்

தெய்வீக அன்னைக்கு,

இந்நன்னாளில், கீழ்கண்ட விஷயங்களைத் தங்களின் கருணை நிறைந்த பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றேன். தங்களை அறிந்தது முதல், தங்களின் அருள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளேன்என்பது உண்மை. அதற்கும் மேலாக தவத்திரு கர்மயோகி அவர்கள் எழுதிய புத்தகங்களும், அவரின் சேவை ஸ்தாபனமான Mother's Service Societyயும், அவரின் வழிநடத்துதலால் இயங்கிவரும் தியான மையங்களும், பல நன்மைகள் எனக்கு ஏற்பட்டதற்கு முக்கியக் காரணங்களாக திகழ்கின்றன. ஆனால், வெள்ளமாக வந்த தங்களின் அருட்கொடை என்னுடைய தவறான கர்மவினையின் சுமையால் சிறு துளியாகக் குறைந்துவிட்டதுஎன்பதை நான் தற்பொழுது உணர்கிறேன். இக்கர்மவினைகள் நான் தங்களை அறிவதற்கு முன்னும், தங்களிடம் வந்தபிறகு தங்களின் குழந்தையாக விளங்குவதற்கான நெறிகளைத் தெரிந்தும் தெரியாமலும் மீறியதால் ஏற்பட்டவற்றிற்கும் பொருந்தும்.

இவ்வாறு ஏற்பட்ட அனைத்துக் கர்மங்களின் சுமையைக் கரைக்குமாறு தங்களைப் பிரார்த்திக்கிறேன். இதற்காகக் கடந்தகாலச் சமர்ப்பணத்தை மேற்கொண்டு, தங்களின் அருளைச் சுருங்கச்செய்த, Mother's Service Society மற்றும் தியான மையங்களின் தொடர்பு மூலம் வந்த அதிர்ஷ்டத்தை இழக்கச்செய்த என் அனைத்துத் தவறுகளையும் முழுமையாக உணர்வேன் என்று உறுதி கூறுகிறேன். என் அறிவிற்கு எட்டிய அனைத்துக் கர்மங்களையும் சாம்பலாக்க வேண்டி தங்களின் சக்திக்கனலுக்கு அர்ப்பணிப்பேன். என் நோக்கங்கள், எண்ணங்கள், உணர்வுகள், நடத்தை ஆகியவைகளை நேர்படுத்துவேன்என்ற தீர்மானத்தை உளமாற எடுத்து, இனி என்றும் தவறான கர்மத்தைச் சேகரிக்கமாட்டேன்என்று தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நான் செய்த ஏதேனும் பெரிய தவற்றையோ

அல்லது செயலையோ என்னால் நினைவிற்குக் கொண்டுவர முடியவில்லையெனில், அவற்றைச் சுட்டிக்காண்பிப்பவருக்கு நான் செவிசாய்ப்பேன்.

இனிய குடிநீரைக் கொண்டுவருவதைத் தடைசெய்யும் குழாயில் உள்ள அழுக்குக் குவியலைப் போன்றது கடந்த காலக் கர்மவினையாகும். குழாயினுள் படிந்துள்ள அழுக்கு கண்களுக்குத் தெரியவில்லை என்பதால், அழுக்கு அதனுள் இல்லைஎன்று அர்த்தமாகாது. குழாயில் தண்ணீர் முழு வேகத்துடன் வாராமல் சொட்டுச் சொட்டாக வெளி வந்தால், குழாயின் உள்ளே வேண்டாத அழுக்கு உள்ளதாகவே அர்த்தமாகும். என்னுள்ளே உள்ள வேண்டாத கர்மவினையின் குவியல் என்னுடைய பர்ஸனாலிட்டியை அடைபட்ட குழாயைப்போல் மாற்றி உள்ளது என்றுணர்கிறேன். இவ்வாறு தவறான கர்மவினையின் ரூபத்திலுள்ள, அசுத்தங்களால் கரைபடிந்த எனது பர்ஸனாலிட்டியை பரிசுத்தமாக்கி, பிரவாகமாக வரும் தங்களின் அருளை முழுமையாகப் பெற்றுத்தரும் சீரான கருவியாகத் தாங்கள் என்னை மாற்ற நான் சம்மதம் அளிக்கிறேன்.

நான் செய்த அனைத்துத் தவறுகளையும் உணரும் அடக்கத்தை நான் பெறுவேனாக. ஒருவேளை என் அறிவில் தெளிவு இல்லையென்றால், அடுத்தவர் சுட்டிக்காட்டும் என் தவறுகளைக் கோபப்படாமலும், பழிக்காமலும் கேட்டுக்கொள்ளத் தேவையான அடக்கத்தை எனக்குக் கொடுப்பீர்களாக.

இதுநாள்வரை நான் இம்முயற்சியை மேற்கொள்ளாமல் இருந்ததற்கும், அதனால் நான் திருந்துவதற்கான தருணத்தைத் தாமதப்படுத்தியதற்கும் என்னை மன்னியுங்கள். என் குறைகளையும், தவறான கர்மங்களையும் பொருட்படுத்தாமல் என் மீது அருளைப் பொழிந்துவரும் தங்களின் கருணாவிலாசத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

- இப்படிக்கு, தங்கள் அன்புக்குழந்தை

❀❀❀





## மனிதனுடைய எண்ணம் பிரம்மத்தில் பூர்த்தியாகிறது (*P.689*)

மனம் மூன்று பிரிவுகளாக உள்ளது. உடலிலும் மனம் உண்டு. அதை ஜட மனம் என்கிறார். அதன் மையம் மூளை. உணர்வுக்கு மனம் உண்டு. அதன் இருப்பிடம் நரம்பு மண்டலம். உணர்ச்சி, கிளர்ச்சியைக் கடந்த தூய்மையான மனம் உண்டு. அதையே மனம் எனக் குறிப்பிடுகிறோம். இவை மூன்றிற்கும் உச்சகட்ட இலட்சியம் உண்டு.

1) ஜடமான மனம் முடிவாக எதையும் நம்புவதில்லை (agnosticism).
2) உணர்வின் மனம் மாயையை இலட்சியமாகக் கொள்கிறது.
3) *மனம் - தூய்மையான மனம் - பிரம்மத்தை இலட்சியமாக நாடி அதில் பூர்த்தியாகிறது.*

உடலுக்குத் தொடு உணர்ச்சியுண்டு. அதற்குக் கண் தெரியாது, காது கேட்காது. மனத்தையும் ருசியையும் அறியும். தொடுவனவற்றை மட்டும் உடல் அறியும். தன்னால் தொட முடியாதவற்றை அதனால் ஏற்க முடியாது, நம்ப முடியாது. **அதனால் உடலின் மனம் எதையும் நம்புவதில்லை (agnostic).** பிராணன்என்பது உயிர் (vital). அதற்குப் பழக்கம் புரியும், பழகியவரை நம்பும். திருடனானாலும் பிரியமாகப் பழகினால் அவனை நம்பும். எவ்வளவுக்கெவ்வளவு பொய்யாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது வசீகரமாக, ருசியாக, கவர்ச்சியாக இருக்கும். பொதுவாக, சமூகத்தில் அளவுகடந்து பிரபலமானவர்கள் தறுதலைகளாக, ஆபத்தானவர்களாக இருப்பார்கள். *உணர்வின் மனம் இல்லாததைப்*

*பிரியமாக நம்பும். அது மாயையை வழிபடக்கூடியது.* தூய்மையான மனம் எண்ணத்திற்குரியது. அது நாடுவது கருத்து. நாட்டு மக்கள் அனைவரும் ஓட்டுப் போட வேண்டும்என்பதைத் தொட்டுப் பார்க்க முடியாது; ருசித்துப் பார்ப்பது எளிதன்று என்று புரியும்; புரிந்ததை ஏற்கும்; ஏற்றால் ஏற்றபடி நடக்கும். தேர்தலன்று எங்கிருந்தாலும் ஊருக்கு வந்து ஓட்டுப் போடவேண்டும் என முடிவு செய்யும். செய்த முடிவுபடி நடக்கும். இதுவே நம் மனத்தின் பகுதிகளில் உச்சகட்டமானது, உயர்ந்தது, உன்னதமானது. மனிதன் இலட்சியவாதி. அதனால் கருத்தை ஆராய்ந்து ஏற்கிறான். அப்படி ஒரு கருத்தை ஏற்றால், அதைவிட உயர்ந்த கருத்து எதிரே வந்தால், அதை ஆராய்வான். அது உயர்ந்ததானால் அதை ஏற்பான். அறிவாளி உயர்ந்த இலட்சியங்களை நாடிப் போகிறான். அறிவு முதிர்ந்தால் விவேகமாகிறது. விவேகம் கருத்தைக் கடந்ததுண்டாஎன ஆராய்ச்சி செய்யும். கருத்துஎன்பது மனிதன் ஏற்படுத்தியது (is a structure). அதற்கு ஒரு கட்டுப்கோப்புண்டு. கட்டுக்கோப்புக்குள் நடக்க கட்டுப்பாடுவேண்டும். மனிதன் தேடுவது இறைவன். இறைவன் சுதந்திரமானவன். உடலுக்குச் சுதந்திரம்எனில் மரணத்தினின்று விடுபடுதல், மரணமிலாப் பெருவாழ்வு, அமரத்துவம். உணர்ச்சி கறுப்பானது. பாசம் அதன் உச்சி. உணர்ச்சி தேடும் உன்னதம் ஒளி. மனமும் சுதந்திரம் தேடுகிறது. கட்டுப்பாட்டினின்று மனம் சுதந்திரம் விழைகிறது. அது கட்டுக்கோப்பற்ற (structurelessness) நிலை. அந்த நிலையையுடையது பிரம்மம். அங்கு எந்த ரூபமும், குணமும், கட்டுப்பாடும், கட்டுக்கோப்புமில்லை. அதனால் மனிதனுடைய எண்ணம் பிரம்மத்தில் பூர்த்தியாகிறது.

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

## பிரதம மந்திரி

வெண்மைப் புரட்சித் தலைவர் வர்கீஸ் குரியன் ஒரு நாள் ஒரு எளிய விவசாயி வீட்டுக்கு வந்தார். விவசாயிக்கு ஆச்சரியம், சந்தோஷம் தாங்கவில்லை. சற்று நேரம் பால் உற்பத்தியைப் பற்றிப் பேசியபின் குரியன்,

“நாளை உங்கள் வீட்டிற்குப் பிரதம மந்திரி வருகிறார்”

என்றார். விவசாயி ஸ்தம்பித்துப் போய்விட்டார். என்ன சமையல் செய்வதுஎன்று தனக்குத் தெரியவில்லை என்றார். விவசாயிக்கு எதுவும் புரியவில்லை. ‘‘பிரதமர் நீங்கள் சாப்பிடும் சாப்பாட்டைச் சாப்பிட விரும்புகிறார். அவருக்காக எதுவும் செய்ய வேண்டாம்’’ என்றார் குரியன்.

பிரதம மந்திரி எவர் வீட்டிற்கும் போகக்கூடாதுஎன்பது சட்டம் (protocol). இவர் எளிய விவசாயி. பால் கறந்து ஆனந்த் பண்ணைக்குச் சப்ளை செய்கிறார்.

பிரதமர் இவர் வீட்டிற்கு வருகிறார்,
இவர் சாப்பிடும் சாப்பாட்டைச் சாப்பிட விரும்புகிறார் எனில்,

இந்த விவசாயிக்கு இந்தத் தகுதி எப்படி ஏற்பட்டது? ஆனந்த் 60 வருஷ வாழ்வில் பிரதமர் இதுபோல் ஒரு பால் பண்ணை விவசாயி வீட்டிற்கு வந்தது இதுவே முதல் முறை. அதுவே கடைசி முறை.

விவசாயியின் மனநிலை கோணத்தில் இந்நிகழ்ச்சியை
விளக்க முடியுமா?

ஒரு பெரிய ஆன்மீகத் தகுதியில்லாமல் பிரதமர் எளியவர் வீட்டிற்கு வர முடியாதுஎன்பது ஆன்மீக உண்மை. இவருக்கு என்ன தகுதியிருந்தது? அது எப்படி வந்தது?

**ஆசையற்ற அமைதி ஆன்மாவில் மௌனமானால் இதுபோன்ற அற்புதம் நிகழும்.**

**நல்லவர், பேராசையற்றவர், நல்ல எண்ணமுள்ளவர் தேவைகள் பூர்த்தியானால் அவர் மனம் அமைதியுற்று, அமைதி ஆன்மாவில் மௌனமாகும். இது தவசி நிலை. இந்திய மண்ணில் பிறந்த எந்த வசதி படைத்த நல்லவர் மனநிலையிது. பரவலானது. இதே மனநிலை அன்பருக்கிருந்தால் அவர் வீட்டிற்குப் பிரதம மந்திரியும், அவரைத் தொடர்ந்து திரண்ட செல்வமும் தொடர்ந்து வரும். இம்மனநிலை பல கோடி சொத்துபெறப் போதும்.**

❀ ❀ ❀

## இன்ஜெக்ஷன்

இன்றைய மருத்துவம் செய்வன அன்றாட அற்புதங்கள். அத்துடன் சில அசம்பாவிதங்கள் எழுகின்றன. இடுப்பில் சிறுவனுக்குக் கட்டி வந்தது. இன்ஜெக்ஷன் போட்டனர். என்னமோ தவறு நடந்துவிட்டது. சீழ்பிடித்துவிட்டது. சோதனை செய்த டாக்டர், ‘‘எலும்புக்குள் சீழ் நுழைந்துவிட்டது. ஆப்பரேஷன் செய்ய வேண்டும். அது (major operation), பெரிய வேலை’’ என்றார்.

பையனுடைய பெற்றோர் திகில் அடைந்து பிரார்த்தனை செய்ய ஆரம்பித்து, அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு தியான மையம் வந்து பேசினர். 3 நாள் பிரார்த்தனை செய்யச் சொன்னார்கள். அவர்கள் கூறியதை நம்பி 3 நாள் பிரார்த்தனை செய்தனர். பிரார்த்தனை முடிந்தது. மேலும் என்ன செய்வது எனப் புரியவில்லை.

‘‘மதுரையில் பெரிய டாக்டரிடம் கேட்டுப் பார்க்கலாம்’’ என உடனிருந்தவர் சொல்லியதைக் கேட்டு, அவர்கள் மதுரை சென்றனர். நடந்ததைக் கூறினர். டாக்டர் சோதனை செய்து பார்த்தார்.

*“எலும்பு, அதனுள் உள்ள இடம் எல்லாம் சுத்தமாக இருக்கிறது. ஏன் ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்கள்?’’ என்றார் பெரிய ஆஸ்பத்திரி பெரிய டாக்டர்.*

**3 நாள் பிரார்த்தனைப் பலிக்கத் தவறியதில்லை. தவறறியாதது தொடர்ந்த பிரார்த்தனை.**

❀❀❀

December 2008 Jiviyam 14 Malar 8
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள் | ரூ.100/- |

*தமிழாக்கம்:* என். அசோகன்

| | |
|---|---|
| SATYA JYOTHI | ரூ.200/- |

(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191